# ஈழத்துக்
# கவிமலர்கள்

ஆ. த.

கனக. செந்திநாதன்

திரு செல்வன் க. நடேசன்
பொலிகண்டி
1. 9. 62.

உ

# ஈழத்துக் கவி மலர்கள்

தொகுப்பாசிரியர் :

கனக. செந்திநாதன்

வெளியீடு :

பராசக்தி நிலையம் — குரும்பசிட்டி — தெல்லிப்பழை

முதல் வெளியீடு:
*(29 - 7 - 62)*
ஆடி *1962*

அச்சுப்பதிவு :
*திருமகள் அழுத்தகம்*
*சுன்னுகம்*

ஆசிரியரது பிறநூல்கள் :

1. ***கவிதை வானில் ஒரு வளர்பிறை***
(கவிஞர் செல்லேயாவின் பாடல் விமர்சனம்)
2. ***மூன்ருவது கண்*** (பண்டிதமணி வாழ்க்கையும் தொண்டும்)

ஆசிரியரது பதிப்பு நூல்கள் :

1. ***சைவநற்சிந்தனைகள்***
*(பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை)*
2. ***ஓவியக்கலை*** (ஆ. தம்பித்துரை*)*
3. ***மத்தாப்பு***
(ஐவர் எழுதிய குறுநாவல்)
4. ***சிறுவர் சித்திரம்*** [வெளிவருகிறது]
(ஆ. தம்பித்துரை)

கிடைக்குமிடம் :
*தமிழ்ப்பண்ணை*
கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்



செல்வி பராசக்தி

தோற்றம் : 11—9—41 மறைவு : 29—6—62

## சமர்ப்பணம்

தனது இருபத்தோராவது வயதில்
எம்மை விட்டுப் பிரிந்த மூத்த மகள்

**பராசக்திக்கு.**

# முகவுரை

ஆறாத துன்பக் கண்ணீரிலே தோய்த்து இந்த முகவுரையை எழுத நேர்ந்துவிட்டது. ஆம், எனது மூத்த மகள் பராசக்தி திடீரென்று வாழக் கொடுத்துவைக்காமலே தன் வாழ்வுப்பாதையை முடித்துக்கொண்டாள். மணவினை கண்டு மகிழ்வெய்த வேண்டிய நான் அவளுக்கு இறுதிச்சடங்கு செய்யவேண்டியவ னானேன். இதை எந்தத் தந்தையாலும் தாங்கமுடியாது.

இந்த ஆழ்ந்த துயரத்தை நிலைபெற்ற ஓர் இலக்கியப் பணி யால் ஓரளவு நிவிர்த்திசெய்ய முயன்றேன். அப்போது என் சிந்தனையில் எழுந்த முடிவு இந்நூற்றொகுப்பு.

மறைந்த பெரியவர்களுக்குக் கையறுநிலை பாடுவிப்பது யாழ்ப்பாணத்து நெடுநாளைய வழக்கம். இவ் வழக்கம் கிராமத் திற் சிறிதுகாலமாக இல்லாமற்போய், தோத்திரப்பாடல்கள் தொகுத்து வழங்கும் நிலைக்கு மாறிவிட்டது. இது மிகவும் நல்ல முயற்சியேயெனினும் அநேகமாகத் திரும்பத் திரும்ப ஒரு சில வற்றையே வெளியிடுவதால் அது அதிக நன்மையளிக்கவில்லை; நிலைபேறடையவில்லை.

எனவே புதுமுறையாக ஈழத்துக் கவிஞர்களிற் சோமசுந்தரப் புலவருக்குப் பிறகு உள்ளவர்களின் தரமான ஒவ்வொரு கவிதை யைத் தொகுத்து வெளியிட முடிவுசெய்தேன்; பல கவிஞர்கள் ஒத்துழைத்தார்கள். மறைந்த கவிஞர்களின் தரமான கவிதைகளை யும் இருக்குங் கவிஞர்களின் சிறந்த பாடல்களையுந் தேர்ந்தெடுத் தேன். இவற்றிலும் சிறந்த பாடல்கள் இருப்பது எனக்குத் தெரியு மெனினும் ஒரு குறிக்கோளை – தரத்தை – உத்தேசித்தே இப் பாடல்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

மறைந்த கவிஞர்களி லிருந்து வரிசைப்படுத்தியிருக்கிறேன். வரிசைப்படுத்தியதிலும் குறிப்புக்கள் எழுதியதிலும் சில பிழைகள் நேர்ந்திருக்கலாம். அவகாசக் குறைவும் இப்போதைய மன நிலையுமே இதற்குக் காரணம்.

கவிதைகளைச் சேர்ப்பதற்கு அனுமதியளித்த கவிஞர்களுக்கும் காஞ்சி பாடிய பண்டிதர் இளமுருகனர் அவர்களுக்கும், அணிந் துரை வழங்கிய பண்டிதமணி அவர்களுக்கும், குறுகிய காலத் தில் இதை அழகாக அச்சிட்டுதவிய திருமகள் அழுத்தகத் தாருக்கும் என் நன்றி உரியதாகுக.

பராசக்தி நிலையம்,
குரும்பசிட்டி.
29-7-62.

**கனக. செந்திநாதன்**

உ

# அணிந்துரை

மாயனுந் திருமாமன் தனஞ்சயனுந் திருத்தாதை
வானோர்க் கெல்லா
நாயனும் பிதாமகன்மற் றேருகோடி நராதிபராம்
நண்பாய் வந்தோர்
சேயனும் அபிமனுவாம் செயத்திரதன் கைப்படுவான்
செயற்கை வெவ்வே
றுயநாள் அவனிதலத் தவ்விதியை வெல்லும்விர
கார்வல் லாரே.

அருச்சுனனுக்கு முதனுள் யுத்தத் தொடக்கத்தில் உண்டான சோகம், உறையிடவும் போதாததொரு சோகம் பதின்மூன்றும் நாளிரவு உண்டாகின்றது. அருமந்த புதல்வன் அபிமந்யு. அருச்சுனனுக்கு அவன் உயிர். தன்னுயிரைக் கொன்றவனைக் கொன்றே தீருவதென்று கடுங் கொடுஞ் சபதமிடுகின்றுன் அருச்சுனன். அதனுல், ஏற்ற படைக்கலம் பெறும் பொருட்டுக் கைலாசகிரிக்கு அருச்சுனனை அழைத்துச் செல்லுகின்றுன் கண்ணன். அங்கேயும் சோகத்தாற் சோர்ந்து வாடுகின்றுன் அருச்சுனன்.

வெள்ளிமயமான சோதிக்குள்ளே ஒரு பொன்னின் சோதி அங்கே அருச்சுனன் எதிரில் தோன்றுகின்றது. அதனைச் சுட்டிக் காட்டுகின்றுன் தோழனும் குருவுமான கண்ணன். அந்த மின் சோதி அபிமந்யுவின் தெய்வவடிவம். அது புஷ்பங்களை ஏந்திக் கொண்டு கைலாசபதியைத் தரிசிக்கச் செல்கின்றது. அருச்சுனன் அபிமந்யுவாகிய சோதியைக் கட்டித் தழுவுவதற்குக் கைகளை நீட்டிக்கொண்டு தொடருகின்றுன். கைக்கெட்டியது வாய்க் கெட்டாததொரு நிலை அருச்சுனனுக்கு எய்துகின்றது. அந்தப் புனிதசோதி அருச்சுனனை அருவருப்பதுபோல விலகி ஒதுங்கி அகன்று சென்று மறைகின்றது. அருச்சுனன் செய்வதறியாது திகைக்கின்றுன்.

அபிமந்யுவின் யதார்த்த நிலே யாது ? என்ற வினு அவன் சிந்தனேயுள் எழுகின்றது. புத்திர சோகம் மற்ருெரு வகையில் மாறுகின்றது.

அபிமந்யு உதறிய எந்தப் புன்புலால் யாக்கைக்கு அருச்சுனன் கண்ணீர் வடித்தானே, அந்த யாக்கையை அபிமந்யு எய்திய தெய்வவடிவம் தன் கால்விரல்நுதியினுலேதானும் தீண்டுதற்கு இனிக் கூசி விலகிச் செல்லுமே. அபிமந்யுவுக்கு இழந்த புன்புலால் யாக்கை நல்லதா ? இப்பொழுதெய்திய தெய்வவடிவம் நல்லதா ? அவனுக்கு எது நன்மை என்பதை அருச்சுனன் அறிய வல்லனு ? விசுவாமித்திரர் முன்னிலேயில் வசிட்டர் பக்கத்திலிருக்கவும் ஸ்ரீராமனுக்கு எது நன்மை என்பது தசரதனுக்குத் தெரிந்ததா ?

' நில்லாதவற்றை ' என்ற குறள் ஈண்டுச் சிந்திக்கத்தக்கது.

மனித உலகுக்கதை 'இலவுகாத்த கிளி'க்கதையாய் முடிவதை இனிமை சொட்டச் சொட்ட சோமசுந்தரப்புலவர் எடுத்து வர்ணிக்கின்ருர். அக்கதை இத்தொகுப்பின் உள்ளீடான நோக்கத்தைச் சுட்டிக்காட்டுவதாய் இந்த நில்லா உலகில் நிலேயாய யதார்த்தம் எது என்பதைச் சிந்திக்கச் செய்கின்றது.

" அன்பு கோண்டோரு ரோசா மலர்ச்சேடி
அருமை யேன்மகன் சாந்தம் வளர்த்தனன்
முன்பு வாசலில் நின்று தளிர்த்தது
முகி ழரும்பி நெகிழ்ந்தோரு காலேயிற்
போன் புனேந்த அவன்முகம் போலோரு
பூம லர்ந்ததப் பூவி னழகிலே
இன்பு கோண்டன னீடுபட் டிம்மலர்
எழிலுக் கேம்மலர் தானிணே யோவேன்ருன் "

என்று புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளே தொடங்குகின்ற 'அழகு' கவிதை புத்திரசோகத்தில் முளேகொண்டு,

" மழலே பேசு மழகு மறைந்திடும்
வளரும் பிள்ளே யழகு மறைந்திடும்
பழகுங் காலே யழகு மறைந்திடும்
பருவக் கன்னி யழகும் மறைந்திடும்

சுழலுங் காலச் சுழியில் அகப்படாச்
சுவைகோள் இன்பக் கவியழ கென்றுமே
அழிவி லாத அழகெனு முண்மையை
அறிதல் யார்க்கு மழகென லாகுமே"

என்ற கவிதையிற் சற்றே தரித்து, யதார்த்த அழகை விசாரிப்ப தாய் அமைகின்றது.

சான்றோர் கவிகள் தேற்றுமர வித்துக்கள்; கலங்கலாகிய பொய்யுலகில் நிலையாய யதார்த்தத்தைத் தெளிவு செய்பவைகள்.

பொய்யான இந்தச் சரீரத்தை 'மெய்' என்கின்றோம். மெய்யை நாடுவதற்கு உபகாரமா யமைதலின் அது மெய்யெனப் படுகின்றது. அவ்வாறே மெய்யாய யதார்த்தத்தை நாடுவதற்கு உபகாரஞ் செய்யும் முறையில் நல்ல கவிதைக ளனைத்தும் யதார்த்தங்களே.

கிளிக் கதையில் இருந்து எழுந்த யதார்த்தவிசாரம், இத் தொகுப்பிலுள்ள ஏனைய கவிதைகளெல்லாம் துணைநிற்க, விபுலாநந்த சுவாமிகளின் 'அன்பு' என்ற கவிதையிற் சென்று முற்றுகின்றது.

சுவாமிகள், அபிமந்யுவுக்கு அழுத அருச்சுனனை அன்புரு வாகிய கண்ணப்பனுக்கி, அழுகைக்கு அடைக்குந்தாழ் செய் யாது, அழவேண்டியதற்கு நன்றாக அழும்படி செய்து, அழு வோனை யதார்த்தமாகிய சிவஞ்செய்திருக்கின்றார்கள். கவிதைக ளின் முடிவு யதார்த்தமே என்பதைச் சுவாமிகள் முடித்துக் காட்டியிருக்கின்றார்கள்.

இத் தொகுப்பை உதவிய கனக. செந்திநாதனின் சோக நிலை யாருந் தெரிந்தது. அவர் தமது அருமைப் புதல்வியின் யதார்த்த நிலையைத் தேடும் முகமே இக் கவிதைத் தொகுப்பு

இலக்கிய இரசனையே கனக. செந்திநாதனின் மூச்சு. இந்த நெறியில் இக்கவிதைத் தொகுப்பு மூர்ச்சை தெளிவித்து யதார்த்த நிலையை வருவிப்பதாக.

*கலாசாலை வீதி,*
திருநெல்வேலி,
25-7-62.

**சி. கணபதிப்பிள்ளை**

## இம்மலரில் இடம்பெற்ற கவிஞர்கள்

சோமசுந்தரப்புலவர்
சுவாமி விபுலாநந்தர்
மகாலிங்கசிவம்
நவநீதகிருஷ்ணபாரதியார்
கல்லடி வேலுப்பிள்ளை
முதுதமிழ்ப்புலவர் நல்லதம்பி
அழகசுந்தரதேசிகர்
'மனுப்புலியார்' கந்தையா பிள்ளை
புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளை
இளமுருகனார்
சோ. நடராசன்
வித்துவான் வேந்தனார்
மு. செல்லையா
நாவற்குழியூர் நடராசன்
சச்சிதானந்தன்
வே. சிவக்கொழுந்து
சரவணமுத்து
சில்லையூர் செல்வராசன்
பேராசிரியர் கணபதிப் பிள்ளை
மஹாகவி
முருகையன்
இ. நாகராஜன்
இராஜபாரதி
நீலாவணன்
திமிலைத்துமிலன்
இராஜ அரியரத்தினம்
அம்பி
தில்லைச்சிவன்
நாவேந்தன்
நயினைகவி இராமுப்பிள்ளை
கதிரேசன்
விடிவெள்ளி
ஜெயம்
அண்ணல்
சத்தியசீலன்
கவிஞர் மு. சோமசுந்தரம் பிள்ளை

# 1. க. சோமசுந்தரப் புலவர்

*[ஈழத்துக் கவிதைவானிலே பெரும்புலவராய்த் திகழ்ந்து பதினையாயிரம் பாடல்களால் தமிழ்த்தாயை அலங்கரித்தவர்; 'தங்கத் தாத்தா' என்று சிறப்பாகப் பேசப்படுபவர்; 'ஆடிப்பிறப்போடு கத்தரித்தோட்டமும்' ஆக்கியளித்து, 'தென்னிலங்கைவள'த் தேன்தமிழ் ஈந்து 'நாமகள் புகழ்மாலை' பாடி இரசிகர் உள்ளத்தில் நீங்காது உறைபவர்; நவாலியூரிற் பிறந்து வட்டுக்கோட்டை இந்து ஆங்கில வித்தியாசாலையில் ஆசிரியப்பணி புரிந்தவர்; முருகபக்தர். அவருடைய கவிதை — நாடக — வசன நூல்கள் பல வெளிவந்திருக்கின்றன.]*

## இலவுகாத்த கிளி

செந்தியின் நாப்போலச் செழுந்தளிர்க ளீன்று
திருமாலின் நிறம்போலப் பசியதழை பொதுளி
நந்தாத நெடுந்தெருப்போற் கிளைகள்பல வோச்சி
நடுக்காட்டி லோரிலவ மரம்வளர்ந்த தன்றே. 1

மஞ்சுதொட வளர்ந்தவந்த இலவமர மதனில்
மரகதமா மணிபோலப் பசுமைநிறம் வாய்ந்த
கொஞ்சுமொழிக் கிஞ்சுகவா யஞ்சுகமொன் றினிதே
குடியிருந்து நெடுநாளாய் வாழ்ந்துவந்த தன்றே. 2

அங்கொருநா ளிலவமர மரும்புகட்டக் கண்டே
அலராகிப் பிஞ்சாகிக் காயாகிக் கனியும்
இங்கிதனைக் கவ்வியெடுத் தென்காலே கரமாய்
ஏந்திமகிழ்ந் தேபுசிப்பே னெனநினைந்த தன்றே. 3

காலையிலே எழுந்துசெயுங் கடமைகளை முடித்தே
கடவுளடி கைதொழுது கதிரெடுக்கப் போகும்
மாலையிலே திரும்பிவந்து மற்றதனைப் பார்த்து
வாயூறிக் கனியாகி வரட்டுமென மகிழும். 4

எண்ணுமலர் பிஞ்சாகிக் காயாகித் தூங்க
இனியென்ன பழுத்துவிடு மெடுத்துண்பே னென்றே
கண்ணையிமை காப்பதுபோல் நாடோறும் நம்பிக்
காத்துவந்த திரவுபகல் காதலித்துக் கிளியே. 5

வறியதொரு மகன்குதிரைப் பந்தயத்திற் காசு
வந்துவிழும் வந்துவிழு மென்றுமகிழ் வாக
பிறிதுநினை வொன்றுமின்றி யாசைமிகு கிள்ளைப்
பிள்ளைமகிழ்ந் திருந்ததங்கே பேணியதைப் பார்த்தே. 6

நன்றுவரும் பழமெடுத்து நானுமின சனமும்
நயந்துவிருந் தருந்துகின்ற நல்லபெருந் திருநாள்
என்றுவரு மின்றுவரும் நாளைவரு மென்றே
எண்ணியிருந் ததுமலடு கறக்கவெண்ணு வார்போல். 7

பச்சைநிறம் மாறியந்தப் பழம்பழுத்த போது
பைந்தார்ச்செம் பவளவிதழ்ப் பசுங்கிளியும் பார்த்தே
இச்சையுடன் தன்னுடைய வினசனத்துக் கெல்லாம்
என்வீட்டிற் பழவிருந்து நாளையென வியம்பி. 8

துஞ்சாது விழித்திருந்தே யதிகாலை யெழுந்து
சொல்லிவைத் தோரையுங் கூட்டிவரும் போது
பஞ்சாகிக் காற்றுடனே பறந்ததுவே வெடித்துப்
பைங்கிளியார் போற்றிவந்த முள்ளிலவம் பழமே. 9

அந்தோவக் கிளியடைந்த மனவருத்த மெல்லாம்
அளவிட்டுச் சொல்லமுடி யாதுவிருந் தாக
வந்தகிளை மிகநாணி வெறுவயிற்றி னோடு
வந்தவழி மீண்டதுவே சிந்தைபிறி தாகி. 10

உள்ளீடு சிறிதுமில்லாப் பதர்க்குவையை நெல்லென்
றுரலிட்டுக் குத்தவெறு முமியான வாபோல்
இல்லாத பயன்விரும்பி ஏமாந்த பேரை
இலவுகாத் திட்டகிளி என்பருல கோரே. 11

## 2. சுவாமி விபுலாநந்தா

[ஈழத்தின் கிழக்குப் பிரதேசமாகிய மட்டக்களப்புப் பகுதியில்—காரைதீவில்—பிறந்து, ஈழத்திலும் தமிழ்நாட்டிலும் தம் புகழ்க் கொடியை நாட்டி, பழந்தமிழர் கண்ட பண்களை ஆராய்ந்து, 'யாழ்நூல்' தந்தவர் சுவாமி விபுலாநந்தா அவர்கள். ஆங்கிலத்திலும் தமிழிலும் பட்டம் பெற்றவர்; அண்ணாமலையிலும் கொழும்பிலும் உள்ள சர்வகலாசாலைகளில் தமிழ்த்துறைத் தலைவராயிருந்தவர்; மயில்வாகனனாகப் பிறந்து இராமகிருஷ்ண சங்கத்திற் சேர்ந்து துறவியானவர்; 'மதங்கசூளாமணி', 'ஆங்கிலவாணி' என்பன இவரது அரிய நூல்கள்.]

### அன்பு

#### அன்பின் வடிவம்

செங்கதிரோன் உச்சியினைச் சென்றணையும் போதினிலே
காளத்தி நாதர்தமைக் காதலித்த சிந்தையராய்
வானத் தரமகளிர் வாழ்த்திசைக்குந் தெய்வஒலி
கந்தருவர் யாழினொலி கானகத்துப் புள்ளினொலி
தேனுகக்கும் வண்டினங்கள் செய்கின்ற பேரரவம்
நீரருவி ஓசை நிறைந்தொன்றாய் நின்றிசைக்க
வேடர்க் கிளவரசர் வேட்டம்போய்க் காட்டகத்துப்
பன்றியொன் றைத்தொடர்ந்து பக்கமலை தாண்டித்
தென்கயிலை யென்னும் திறம்படைத்த காளத்தி
நன்மலையின் உச்சியினை நாடினார்; அப்பொழுது
முன்செய் தவங்கள் முடிவிலா இன்பான
அன்பினைக் காட்ட ஆர்வம்உளத் திற்பொங்க
என்பை உருக்கி எழுகின்ற வேட்கையொடு
நாணனும் அன்பும் நளிர்வரையின் முன்செல்லத்
தத்துவங்க ளென்னுந் தனிப்படிகள் தாண்டியப்பால்
அன்பாஞ் சிவத்தை அடைகின்ற வர்போல
மாமலையின் மீது வழிநடக்கும் எல்லையிலே
திங்கட் சடையார் திருநோக்கஞ் செய்தருள
அஞ்சிலைக்கை வேடனார் அன்பின் வடிவானார்.

## அன்பின் நிலைக்களம்

அன்பினுல் எவ்வுயிரும் ஆக்கி அவைதம்மை
அன்பிறுற் காத்தொடுக்கி அன்பால் வளர்த்துப்பின்
அன்பால் அருள்புரியும் ஆரமுதை அன்பருக்குத்
தந்தையாய்த் தாயாய்த் தனிநா யகனுகி
விந்தை புரியும் விறலோனை அந்தமிசை
ஆனந்த மாகிமனத் தண்ணிக்குந் திண்ணியனை
வைத்த நிதிபோன்ற மலைக்கொழுந்தைத் திண்ணனுர்
கண்டார், நெடிதுயிர்த்தார் காதலுளத் திற்பொங்க
'அச்சோ இவர்தான் அகப்பட்டார்' என்றுரைத்தார்
வனசரரும் வல்விலங்கும் மலிந்தபெருங் கானகத்தில்
தனியே இவரைவிட்டுச் சற்றும் பிரிதலொட்டேன்
இவர்பசியை ஆற்றுவதற் கினிய இறைச்சியினைக்
கொண்டு வரல்வேண்டும் கொடியேன் எதுபுரிவேன்!
என்றறிதில் நீங்கி நாணனும்பின் வந்தணைய
பொன்முகலி சேர்ந்து புதுமலர்க்கா விற்புகுந்தார்
மஞ்சநீர் வாயினிலே மலர்த்தாமம் குஞ்சியிலே
வில்லேந்தும் கையொன்று மென்தசைப்போ
னகம்ஒருகை
எம்பிரா னுர்பசிப்பார் என்றேங்குஞ் சிந்தையுடன்
அன்பின் நிலைக்களத்தை நாடியே ஓடிவந்தார்.

## அன்பின் செயல்

ஆகமத்தாற் பூசைபுரி ஐயர்சிவ கோசரியார்
என்பும் இறைச்சியுங் கண்டிதயந் துணுக்குற்றுர்
இரவிற் கனவினிலே ஈசரவர் முன்தோன்றி
'வன்றிறல் வேடனென மற்றவனை நீநினையேல்
ஆங்கவன்தன் வடிவெல்லாம் நம்பக்கம் அன்பாகும்
ஆங்கவன்தன் அறிவெல்லாம் நமையறியும் அறிவாகும்
ஆங்கவன்தன்செயலெல்லாம் நமக்கினிய வாம்' என்னத்
தம்பிரா னுர்மொழியத் தாமவர்தன் பின்னிருந்து
சிலைவேடர் செய்த செயற்கரிய செய்கைகண்டார்.

கண்ணில் இனியார்க்குக் கண்ணிடந்து அப்பியதும்
மற்றக்கண் ணுங்கொடுக்கும் வள்ளல் திருக்கரத்தை
ஈசனுர் பற்றியதும் இன்னமுத வாக்கினுல்
'நில்லு கண்ணப்ப! நில்லுகண் ணப்பவென்
அன்புடைத் தோன்றல் நில்லு கண்ணப்ப!!
ஒல்லையில் நம்புண் ஒழிந்தது நீபாராய்
நல்லை நீ நல்லை நீ' எனத்திரு வாய்மலர
ஆங்கது கேட்ட அவனியும் வானமும்
அன்பிற்கு முண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலார்
புன்கணீர் பூசல் தருமென் றுரைத்ததுவும்
கண்ணினுற் கண்டும் செவியினுற் கேட்டுணர்ந்தும்
அன்பின் செயலை அறிந்தசிவ கோசரியார்
என்றும் அழியாத இன்பநிலை எய்தினரே.

---

## வீரம்

[ஷேக்ஸ்பியர் (செகசிற்பியார்) எழுதிய 'யூலியஸ்சீசர்' என்ற நாடகத்தில் வரும் ஒரு காட்சியின் மொழிபெயர்ப்பு இது. யூலியஸ்சீசரின் மனைவி கல்பூர்ணியா தீக்கனுக்கண்டு அவனை அன்று சபைக்குச் செல்லவேண்டா மெனக் குறையிரந்து வேண்ட, சீசர் வீரஉரை பகர்கிறுன்.]

"அஞ்சினர்க்குச் சதமரணம், அஞ்சாத நெஞ்சத்(து)
ஆடவனுக்(கு) ஒருமரணம் அவனிமிசைப் பிறந்தோர்
துஞ்சுவர்என் றறிந்திருந்தும் சாதலுக்கு நடுங்கும்
துன்மதிமு டரைக்கண்டாற் புன்னகைசெய் பவன்யான்.

இன்னலும்யா னும்பிறந்த தொருதினத்தில் அறிவாய்
இளஞ்சிங்கக் குருளைகள்யாம் யான்மூத்தோன் எனது
பின்வருவ தின்னலெனப் பகைமன்னர் அறிவார்
பேதுறல்பெண் ணணங்கே! யான் போய்வருதல்
வேண்டும்.''

# 3. குருகவி ம. வே. மகாலிங்கசிவம்

*[பிரபல உரையாசிரியர் மட்டுவில் க. வேற்பிள்ளைப் புலவரின் புத்திரனுகப் பிறந்து, மண்சோறு ஆக்கி விளையாடும்போதே கற்பனை மிக்கவர் எனப் பெயர்பெற்று, பழனிக்குமரன்மீது கவியாத்து, குருகவி எனப் பிரசித்தமாகிக் கற்பனையின் கடைசி மூச்சாகத் திகழ்ந்தவர் இவர். மேடைப் பேச்சுமூலம் இலக்கியத் தேனை வாரி வழங்கியவர். அவர் பாடிய தனிப் பாடல்களில் 'கண்ணுவர் வாழ்த்து' பிரசித்தமானது. 'அன்னை தயை' என்ற கட்டுரையில் உள்ள இப் பாடல்களும் அவர் பாடியன.]*

## அன்னை

பாலரவி பலகோடி செஞ்சுடர் விரித்தெனப்
படரொளிசெய் திருமேனியும்
பரிவுடன் பெற்றசீ வர்க்கெலாம் பேரருள்
படைக்குங் கடைக்கண்களும்
கோலமுறு பவளவா யுங்கொவ்வை யிதழ்களுங்
குறுநகையு மலர்வதனமும்
குலவுநாற் கையுமக் கையினிற் பாசாங்
குசஞ்சிலை மலர்கணைகளுஞ்
சீலமுறு மன்பர்தந் தஞ்சரஞ் சிதகஞ்ச
செஞ்சரண செல்வங்களும்
செங்கமல வல்லியும் வெண்கமல மெல்லியுஞ்
சேவைசெய் பாராட்டுமெக்
காலமுறுஞ் சிறியனிரு கண்ணைவிட் டகலாது
காட்சிதந் தருள்புரிகுவாய்
காந்தர்கா மாட்சிநினை வாய்ந்தகா மாட்சிபுனை
காஞ்சிகா மாட்சியன்னையே.

ஓதரிய வென்குற்ற மெல்லா மொழித்தருளிப்
பாதம் பணியப் பரிசருள்வாய் — பூதந்
திடைக்கலந் தாயே யிடர்க்குடைந்தே னேழை
அடைக்கலந் தாயே யருள்.

# 4. பண்டிதமணி
# சு. நவநீதகிருஷ்ண பாரதியார்

*[சோழவளநாட்டுத் திருக்கண்ணபுரத்திற் பிறந்த இப் பெருமகனுரை ஈழவளநாடு தன் சுவீகார புத்திரனுக ஏற்றுக்கொண்டது. 'மாவைக்கவுணியன் வெண்ணெய்க்கண்ணனுர்' என்ற புனைபெயரோடு இவர் எழுதிய கட்டுரைகள், பாடல்கள் பல. சங்கச்செய்யுள் நடையில் பாக்கள் பாடும் திறன் மிகஉடையவர். இராமநாதன் கல்லூரியிலும் பரமேஸ்வராக் கல்லூரியிலும் பல ஆண்டுகள் ஆசிரியராகக் கடமை ஆற்றியவர். 'உலகியல் விளக்கம்,' 'திருவாசக விரிவுரை' என்பன இவரியற்றிய பிரசித்தமான நூல்கள். 'செழுங்கதிர்ச் செல்வம்', 'பறம்புமலைப் பாரி', 'புத்திளஞ் செங்கதிர்', 'ஆதிமருதி' எனப் பல கவிதை நூல்களைப் பாடியுள்ளார்.]*

## இன்பம்

காடுமே டனைத்தினையும் சமப்படவே செய்து
  காட்சியமை மாட்சிபெறக் கைசெய்து கொண்டே
ஈடிலா வயல்முதலா எண்ணியவை எல்லாம்
  இனிதாக ஏற்றபடி எங்கெங்கு மாக்கி
ஓடிவந்து பாய்நதிகள் ஏரிகுளம் இவற்றுல்
  ஒருகுறையும் இல்லாமல் ஒழுக்கமுறக் காத்துக்
கூடுதா னியம்பஞ்ச சஞ்சீவி முதலாக்
  குறித்தவெலாம்உழவாலே குவிப்பதுவும்இன்பம். 1

நாட்டவர்தம் நலனெல்லாம் தம்நலனுக் கொண்டு
  நாளெல்லாம் நெற்றிவேர் நிலன்சொட்டஉழைத்தே
தேட்டமதன் பயனெல்லாம் நாட்டவரே நுகரச்
  செம்மாந்து முகமலர்ந்து தெய்வமெனத் திகழ்ந்து
பாட்டெல்லாம் தம்புகழே பாராட்டிப் போற்றப்
  பகல்நனவிற்கனவிலுந்தொண் டேபுரிந்துகொண்டு
வீட்டினிலே வருநன்மை மேதினியில் விளக்கும்
  மேலோர்கள் கூட்டுறவை விரும்புவது மின்பம். 2

வான்முகிலின் கருணைமழைப் பெயலெலாந் திரண்டு
மலையுச்சி நின்றிறங்கி மளமளென ஓடித்
தேன்கலந்து பூச்சூடி மான்மதச்சாந் தப்பித்
திகழ்கதலி மாபலாத் தீங்கனிச்சே றளவி
ஆன்பாலுந் தான்பருகி அணிசெய்பே ராருய் [றித்
ஆங்கெதிர்ந்த விளைவயலின் அகத்திலறம் போற்
தான்புரியுந் தொண்டாலே தரணியெலாம் வளர்க்கும்
தாயியல்பை நேயமுடன் தாங்காணல் இன்பம். 3

நினைவகன்று தமிழுருவத் தாயாக மாறி
நிலையியங்கு பொருள்களுக்குத் தம்நிலையை விளக்க
மனவுணர்வும் வாக்குமளித் தெல்லாரும் தெருள
மற்றவற்றைப் பாடவைக்கும் தெய்வீகப் புலவர்
புனையமுத காவியங்கள் நாடகங்கள் தம்மைப்
பொன்போலப்போற்றிக்கற் றுளந்தெளிந்துமுற்றும்
புனிதமிகு மறுபிறப்பை எடுத்தவர்போ லாகிப்
பூவுலகில் அறவாழ்க்கை பூணுதலும் இன்பம். 4

வற்றவற்றக் கிணறூறும் வகைகண்டு நாமும்
வாய்த்தபொருள் பிறர்க்குதவி வாழுவதும் இன்பம்
உற்றநடு நிலைதவறி ஒன்றுபெறும் பொருளை
ஊறுபுரி தொற்றுநோய் எனஒழிப்ப தின்பம்
சுற்றமென ஊர்நடுவுள் சூழ்ந்துசோம் பாமல்
துறையுதவும் வன்னிபுக்குக் கமஞ்செய்வ தின்பம்
செற்றமொடு செருக்ககன்று சீவர்களை எல்லாம்
செகதீசன் சன்னிதியாச் சிந்தைசெய்வ தின்பம். 6

செய்யசிவ னொளிபாதச் சிகரத்தி னின்று
செங்கதிரை வைகறையிற் காண்பதுவும் இன்பம்
துய்யநறும் பலமலரை ஒருமாலை யாகத்
தொடுத்தழகுபார்த்துவக்கும் தூய்மையுமோரின்பம்
வையகத்தார் மகிழ்ச்சியெலாம் ஒருசேரக் கொண்டு
மனமாலை யாத்தொடுக்கும் மாண்பதுவும் இன்பம்
செய்யும்மனை வாழ்க்கையெலாம் சீவகா ருணியச்
சீரென்றே மாசகன்று சிந்தைகொளல் இன்பம். 7

## 5. ஆசுகவி க. வேலுப்பிள்ளை

[கல்லடி வேலுப்பிள்ளை என்று பிரசித்திபெற்ற வயாவிளான் ஆசுகவி வேலுப்பிள்ளை அவர்கள் நகைச்சுவையிலும் கண்டனங் களிலும் சிலேடைக் கவிகள் இயற்றுவதிலும் தன்னிகரற்று விளங்கியவர். அவரைப் பற்றிய கதைகள் கிளைவிட்டுப் பரந்து கிராமங் கிராமமாகப் பலபடி பேசப்படுகின்றன. 'சுதேசநாட்டியம்' என்ற பத்திரிகையை நடாத்தி எதிரிகளைக் கதிகலங்கச் செய்தவர். 'யாழ்ப்பாண வைபவ கௌமுதி' இவரது பிரசித்தமான நூல். பிற்காலத்தில் 'உன் சித்தாந்தமென்ன?', 'கதிரை வேலவர் பதிகம்' என அவர் பாடியுள்ளவை மனதை உருக்கக் கூடியன.]

### பச்சாத்தாபம்

புரமுதிர் வடைந்துநரை திரையணுக நாதிணர்வு
புகுதவிளி செவிகள்குன்றப்
பொச்சாப்பு மற்சைப் பிராந்தியா ளக்கொறி
புலிக்கஞ்சு மாபோலமுன்
வரவுகண் டெற்கஞ்சி நின்றவர்கள் நகையாட
மக்கள்மனை யருவருக்க
வருகிரு னெமனென்று விப்ரயோ கங்கொண்டு
வாய்புலம் பிப்புலம்பித்
தருணமிதி லெனதுநெஞ் சேங்கித் தவிக்குதிச்
சமயமா றுதலெனக்குத்
தந்துகாப் பதுஎந்தை யுன்கடமை வேறுதை
வதமுன்னை யன்றியார்கொல்!
மரணபயம் மரணவே தனையென்னை யாளாது
வாவென் முனிசுப்பிர
மணியகுரு பரரதன வெனதுகண் மணியனைய
மான்மருக வேன்முருகனே.

---

நடையுந் தள்ளாடி வயதும் முதிர்ந்து நரையுங்கொளப்
படுமென்று நோயும் பழிவாங்கிந் நேரமென் பாடுசொல்லி
விடவுன் துணைபெற வெற்குன் றிருவுரு வத்தைவிளங்
கிடவைக்க வேண்டுங் கதிரைப் பதியுறை யீசுரனே.

# 6. முதுதமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி

[வட்டுக்கோட்டையிலே பிறந்து, கொழும்பு சாஹிருக் கல்லூரியில் தலைமைத் தமிழ்ப் பண்டிதராய் அமர்ந்து இருபத்தெட்டாண்டுகள் இலங்கை முஸ்லீம்கள் மத்தியிலே தமிழார்வத்தை வளர்த்தவர் நல்லதம்பி அவர்கள். ஈழத்திலே இஸ்லாமிய இலக்கியங்களைப் பற்றி நன்கு அறிந்த தமிழ்மகன்; இலங்கைச் சுதந்திர விழாவை ஒட்டி நடைபெற்ற 'மரதன் ஓட்ட'ப் பாடற் போட்டியில் முதற் பரிசு பெற்றவர்; சிறுவர்களுக்கேற்ற இனிய எளிய பாடல்கள் இயற்றுவதில் ஆற்றல் வாய்ந்தவர்.]

## ஊசல் வரி

உலகிற் பழமைமிக வுடைய மொழிகளுள்ளே
இலகு முயிர்மொழியா மினித்ததமிழ்த் தாயையன்பாற்
குலவு மணிப்புதல்வீர் கொண்டாடிப் பாடியாம்
அலகில் மகிழ்முகிழ்ப்ப ஆடாமோ ஊசல்
அரிய புகழ்பாடி ஆடாமோ ஊசல். 1

தன்னகட்டில் தோன்றித் தடுமா றவைபோலா
தின்னுந் தனிச்சிறப்போ டிலங்குந் தமிழணங்கை
மன்னர் பலர்முயன்று வளர்த்த மலர்க்கொழுந்தை
அன்னைதனைப் பாடியாம் ஆடாமோ ஊசல்
அழகின் திறம்பாடி ஆடாமோ ஊசல். 2

ஐந்திணையின் மாட்சி அகத்தடக்கி வேல்வேந்தர்
முந்திடு கோலோச்சு முறைநிறுவி மெய்ந்நெறியின்
வந்திடுமா றுண்மையறம் வழுத்துமொரு மாதரசை
அந்தமிழைப் பாடியாம் ஆடோமோ ஊசல்
அறிவு படைத்தோமென் றுடாமோ ஊசல். 4

தொல்காப் பியமாந் துணையைமணிப் பெட்டகத்தைப்
பல்காற் பயின்றெம் பழமைதனைப் புதுக்கி
ஒல்காச் சிறப்போ டொளிவிளங்கி வாழ்துமென
அல்கா தறைகூவி ஆடாமோ ஊசல்
அருந்தமிழில் வல்லோமென் றுடாமோ ஊசல். 5

பத்தினுட னெட்டுமொரு பத்துமுய ரெட்டுமென
இத்தரையி லுண்மை இயற்கைசெறி நூல்கள்தமைப்
பத்துடையே மாகிப் பயின்றுதமிழ் மக்களென
அத்தனரு ளோடுவளர்ந் தாடோமோ ஊசல்
அகம்பொலிய நின்றாமென் றாடோமோ ஊசல். 5

வள்ளுவனார் தந்த மறுவிலாத் தூவிளக்கைத்
தெள்ளுதமிழ் மேன்மைபெறச் செய்த திருக்குறளை
யுள்ளமதைக் கொள்ளைகொள்ளு மொண்பொருளை
உயிர்மருந்தை
யள்ளியள்ளி யுண்டோமென் றாடாமோ ஊசல்
அணியார் நலம்பாடி யாடாமோ ஊசல். 6

நுண்மையினி நுண்மை நுனித்துநுக ரோவியமாந்
திண்மைதரும் பாக்கள் செறிசுவடி கம்பனெனும்
பண்மலிந்த மேலோன் பசுந்தமிழின் முறைநிறுவும்
அண்ணியசீர் நூல்பாடி யாடாமோ ஊசல்
அலமரலைத் தீர்த்தேமென் றாடாமோ ஊசல். 7

இளங்கோவுஞ் சாத்தனெனு மெழிலோனு மீந்தனவுந்
துளங்காப் புலமையுடைத் தூயோர்கள் யாத்தனவும்
உளங்கூர் மகிழ்ச்சிதரு முரைவளனுங் கற்றியாம்
அளந்தோம் புலமையென ஆடாமோ ஊசல்
அன்பொழுக வாழ்துமென ஆடாமோ ஊசல். 8

கள்ளியினால் வீடுகட்டும் கருத்துடையார் போலருநூல்
உள்ளமிசைக் கொள்ளாதே ஒளியுடையே மென்றுலவல்
எள்ளற் குரியதென எண்ணியெம தின்னுயிராம்
அள்ளுதமி ழாய்ந்துநின் றிங் காடாமோ ஊசல்
அமைதி யடைந்தோமென் றாடாமோ ஊசல். 9

தூயதமிழ் தனைக்குறைக்குஞ் சூழ்ச்சிமலி புலவர்களும்
ஆயநுகர் வத்தனையும் அவளளிப்ப அடைந்திடுவார்
தாயவளைத் தூற்றித் தனிப்புகழைத் தேடுமிவர்
ஆயினறஞ் செற்றாரென் றாடாமோ ஊசல்
அகத்தழுக்குப் பூண்டாரென் றாடாமோ ஊசல். 10

# 7. அழகசுந்தர தேசிகர்

*[ தமிழ் வளர்த்த தாமோதரனாரின் திருக்குமாரரும், இலங்கைச் சர்வகலாசாலையில் தமிழ்ப்பேராசிரியராய் இருந்தவருமான வண. பிரான்சிஸ் கிங்ஸ்பெரிதான் 'அழகசுந்தரதேசிகர்.' தூய்மை பெற்ற உள்ளமும் சமரச சுபாவமுடைய மனமும் தான் சரியெனக் கண்டதைத் துணிவுடன் கையாள்வதில் விருப்பமுங் கொண்டவர் இவர். 'இராமன்கதை', 'பாண்டவர் கதை', 'சந்திரகாசம்', 'மனோன்மணிநாடகம்' என அவர் எழுதிய நூல்கள் பல. 'யாம் ஐவேம்' என்ற மொழிபெயர்ப்புப் பாடல் அவர் உள்ளத்தைப் படம்பிடித்துக் காட்டப் போதுமானது.]*

## யாம் ஐவேம்

### குறள்வெண்செந்துறை

காங்கேயன் துறையிருந்து கீரிமலை தனக்குக்
கடற்கரையே நானடந்து போனவொரு நாளில்
ஆங்கேநல் லழகியொரு சிறுமியைச்சந் தித்தேன் ;
அவள்முகத்தை மதியெனஓர் களங்கமுமங் கில்லை. 1

எட்டுவய துப்பேதை இருண்டகரி குழலே
எட்டாம்நாட் பிறைபோன்ற நெற்றியிலே புரள,
கட்டழகி இருபுருவம் வில்லென்ன லாமோ?
காண்டீவம் கோதண்டம் என்பதுவே தகுதி. 2

கண்ணிரண்டும் அமுதம்எனல் பொருந்துவதே யன்றிக்
கணையென்றும் நஞ்சென்றும் கழறவிடம் இல்லை
பெண்ணரசி பவளவிதழ் திறந்துநகை செய்யப்
பிறங்கினவால் வெண்முத்தம் பேதைமுகந் தனிலே. 3

“ தங்கைச்சி, உன்பேர்சொல், அஞ்சுசதம்† தருவேன் ;
  தாயுண்டோ தந்தையுண்டோ? சகோதரர்கள்
  உண்டோ ? ”
“ புங்கவரே, என்பேர்தான் அஞ்சுசதம் பெறுமோ ?
  போம்,போம், போம், ஏனெனக்கு நாய்தின்னுக் காசு? 4

“ இங்கென்னை எல்லாரும் சுந்தரியென் றழைப்பார் ;
  என்னுய்ச்சி என்னப்பு இருக்கின்றார் வீட்டில் ;
எங்களண்ணர் சம்பந்தர் கொழும்பினிற்கற் கின்றார் ;
  என்னக்கை சிவகாமி இறங்கூனில் உள்ளார். 5

“ எனக்கிளையாள் கற்பகந்தான் போனபுரட் டாதி
  எங்கள் நட ராசர்திருக் குஞ்சிதபா தந்தான்
தனக்கரிய பொருளென்று சார்ந்துசுகிக் கின்றாள்;
  தம்பிசிதம் பரநாதன் தவழ்கின்றான் இப்போ. 6

“ நாங்கள்ஐவேம் பிள்ளைகளே, வேறுபிள்ளை இல்லை;
  நங்கள்அப்பு ஆச்சிக்கு நாங்கள்ஐவேம் உள்ளேம்;
‘நீங்கள்உளீர் ஐவிர்மக்காள், நடராசர் அருளால்,
  நீங்கள்ஐவீர் எங்களுக்குப் புலனைந்து போலே.’ 7

“ இப்படியே ஆச்சிஅப்பு எங்களுக்குச் சொல்வார்
  நீர்கேட்ட கேள்விக்கு விடைதந்தேன் ” என்றாள்.
செப்பினசுந் தரிமுகத்தை நன்குகவ னித்து,
  “ சிறுமி,உனக் கொருமொழிநான் சொல்லஇடந்
  தருவாய். 8

“ ‘நாங்கள்ஐவேம்மக்கள்உளேம்’என்றுமொழிநவின்றாய்
  ஐவரிலே ஒருத்திநட ராசர்பதம் நண்ணின்
பாங்கிபின்னர் நால்வர்உளீர், ஐவர்என்றல் தவறு;
  பாராய்அஞ் சினிலொன்று போனால்நா லன்றோ ?” 9

---

† சதம் நூறு—ரூபா ஒன்று ; அஞ்சுசதம்—மாரூபா.

"ஐயா,நீர் பேசுவது விந்தையினும் விந்தை!
அடியேன்யான் சொல்லுவதைப் பொறுமையுடன் கேளும்:
மெய்யாய்என் அண்ணனவர் கொழும்புக்குப் போனால்,
மேலுமொன்று போனதினால் மூன்றென்பீர் போலும்! 10

"அக்கைசிவ காமிபின்னர் இறங்கூனுக் ககன்றால்
அவர்போக இருவர்உளீர், மூவரிலீர் என்பீர்!
இக்காலம் இருவர்உளேம் ஆச்சிஅப்பு வோடே,
யாழ்ப்பாணந் தனைவிட்டு மூவரவர் சென்றார்." 11

இந்தமொழி தேன்மொழியாள் இயம்புவதைக் கேட்டே
இன்னுமொரு முறைஅவட்குப் போதிக்க எண்ணி,
"சுந்தரி,நீ என்மொழிகேள்: கொழும்புக்குச் சென்ற
சோதரனார் திரும்பிவருவார்,இதுமெய் அன்றோ? 12

"அக்கைசிவ காமியுமே இறங்கூனி லிருந்து
அவ்வணமே திரும்பிவரு வார்இதுமெய் அன்றோ?
தக்கதங்கை கற்பகத்தாள் திரும்பிவரு வாளோ?
தாரணியில் நீயவளைக் காண்பாயோ இனிமேல்? 13

"ஆதலினால் ஐவர்இலீர், நால்வர்உளீர் என்றேன்;
ஐவர்இலீர், நால்வர்உளீர்—அறிந்துகொள் நீ, அம்மா?"
பேதையவ ளோடென்ன பேசிடினும், ஐயோ,
பேதையவள் தான்பிடித்த பிடியைவிட வில்லை. 14

"கொழும்புக்குச் சென்றஅண்ணர் வந்தாற்தான் உளரோ
கொழும்பினிலே இருந்துவிடின், இல்லைஅவர் போலும்
வழுவில்சிவ காமியக்கை இறங்கூனி லிருந்து
வந்தாற்தான் உளர்,இலையேல்,இலர்என்பீர் போலும்.

"'உன்தங்கை இங்கினிமேல் ஒருகாலும் வாராள்,
உங்களிலே இனிஅவளைச் சேராதே' என்றீர்
என்தங்கை இங்கினிமேல் வாராளே யாயின்,
யான்அங்கே போய் அவளைக் காணமுடி யாதோ? 16

"கொழும்பிலண்ணர் வாராரேல் நானங்கே செல்வேன்;
அக்கையவர் வாராரேல் குறுகிஅங்கே செல்வேன்;
எழுதவொண்ணு அழகுடையாள் கற்பகம்வா ராளேல்,
'எங்குநட ராசர்'என ஏகிடுவேன் அங்கே. 17

"ஆதலினுல் ஐவருளேம் ஐவருளேம் யாங்கள்;
ஐவருளேம் ஐவருளேம் ஆச்சிஅப்பு வுக்கு,
பேதைஅடி யேன்உமது போதனையைக் கேளேன்,
பிழையாயின் பொறுத்தருளும், பெரியவர் நீர்அன்றே."

இவ்வாறு சுந்தரிதான் இயம்பியதைக் கேட்டேன்
எட்டுவய துப்பிள்ளைக் கிருந்தஅறி வென்னே!
ஒவ்வாது நான்சொன்ன சொல்லென்று கண்டேன்
உடனேஎன் மயக்கமெலாம் ஒழிந்துபறந் ததுவே. 19

சாவுக்கும் இறப்பதற்கும் பேதம்இன்று கண்டேன்
சாவனவெல் லாமொழிந்து சூனியமாய்ப் போகும்
சாவனவெல் லாமொழியும், இறப்பவர்கள் ஒழியார்!
'இற' என்ற சொல்லுக்குக்'கட' என்ற பொருளே. 20

# 8. 'மனுப்புலியார்' கந்தையாபிள்ளை

[யாழ்ப்பாணத்து வடலியடைப்பைச் சேர்ந்த நொத்தாரிஸ் கந்தையா அவர்கள் 'மனுப்புலியார்' என்ற புனைபெயரில் அநேகம் பாடல்களைப் பாடியுள்ளார். இவருடைய பாடல்களில் மென்மையான அங்கதச் சுவை நிரம்பியிருக்கும். 'ஆறு அறிந்த அந்தோனியார்' என்ற இவரது கதைப்பாடல் பிரசித்தமானது. அரசியலில் தேசியவாதியாக விளங்கி வகுப்புவாதிகளை அக் காலத்தே கேலிசெய்து பல பாடல்கள் யாத்துள்ளார். கிறீஸ்தவ ராகும் இவர் கிறிஸ்துநாதர் பிறப்பைப் 'புல்லணை' என்னும் கவிதையாக இயற்றியுள்ளார். அதில் மூன்று கவிதைகள் இவை.]

## புல்லணை

பூரணமா னுடனான ஐயன் பாதப்
பொன்மலரைப் போற்றிசெய்து புவியும் வானும்
ஆரணமும் நிறைந்துநின்ற அவனை மக்காய்
அன்றுரைத்த படியவனி யடைந்து ராவிற்
சீரணிபெத் தலையூரிற் செறியி ருட்டிற்
சேர்தொழுவ மொன்றினிலே சிதைந்த புல்லில்
ஆருமற்ற னெனவே கிடக்கின் றானிவ்
வதிசயத்தை யடைந்தறிவ மன்புள் ளீரே.

அன்னைமடி தனிற்கிடக்கும் அப்பன் தன்னை
அனாதியொரு தானேயாய் அமர்ந்தான் தன்னை
பொன்னைநிகர் திருமேனி பூண்டான் தன்னைப்
புவிபரனைப் பூரணமாய்ப் போற்றிக் கண்டு
தன்னையறிந் திடச்செய்ய வந்தான் தன்னைத்
தற்பரனை யற்புதனைக் கரங்கள் கூப்பி
என்னையிதுன் கருணையென எடுத்து வாழ்த்தி
இணையடியில் வீழ்ந்தின்ப மடைவ மன்றே.

அந்தரதுந் துபிமுழங்க அரசர் போற்ற
அருவிலைப்பட் டாடையினை அணிய ரோமம்
தந்திடுகம் பிளிகுளிரைத் தடுக்க நூறு
தையலர்கள் தம்பிதம்பி என்று தூக்க
சுந்தரமஞ் சத்தினிது மெத்தை மீது
தூங்கவுனக் குக்கிடைக்க வில்லை யையா!
கந்தையணிந் தருங்குளிரி லன்பர் கத்தக்
காவலனே நீகிடக்கும் காட்சி யென்னே!

## 9. புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை

*[இலக்கண இலக்கியப் புலமையோடு நல்ல கவித்துவ ஆற்றலுஞ் சிறந்த நாவன்மையும் பெற்று, கிழக்கு மாகாணத்தின் தமிழ்ச் சுடராய் விளங்குபவர் பெரியதம்பிப்பிள்ளை அவர்கள். சுன்னுகத்துக் குமாரசுவாமிப் புலவரது மாணக்கர்; 'பண்டிதமணி', 'புலவர்மணி' ஆகிய பட்டங்களைப் பெற்றவர்; 'பகவத்கீதை வெண்பா', 'மண்டூர்ப்பதிகம்', 'மீட்சிப்பத்து', 'வாழி கல்லோயா நங்கை' முதலிய கவிதைநூல்களின் ஆசிரியர்; மட்டக்களப்புத் தமிழாசிரியர் பயிற்சிக் கலாசாலையில் தமிழ் விரிவுரையாளராக இருந்து ஓய்வுபெற்றுத் தமிழ்த் தொண்டு புரிபவர்.]*

### அழகு

அன்பு கொண்டொரு ரோசா மலர்ச்செடி
அருமை யென்மகன் சாந்தம் வளர்த்தனன்
முன்பு வாசலில் நின்று தளிர்த்தது
முகி ழரும்பி நெகிழ்ந்தொரு காலையிற்
பொன் புனைந்த அவன்முகம் போலொரு
பூம லர்ந்ததப் பூவி னழகிலே
இன்பு கொண்டன னீடுபட் டிம்மலர்
எழிலுக் கெம்மலர் தானிணை யோவென்ருன். 1

மாலை வந்தவன் பார்க்கையி லம்மலர்
வாடி முன்பு வயங்கு மழகும்போய்க்
காலை வண்டிசை பாடு மலர்ச்செடி
கவலை மூழ்கிக் குழைவதுங் கண்டனன்
காலை பூத்துப்பின் மாலையி லேயெழில்
கருகி வாடும் மலரினைப் போலவே
ஞால மீதில் மனிதர்தம் வாழ்வென
நவிலு மிம்மலர் காணெனச் செப்பினேன். 2

மழலை பேசு மழகு மறைந்திடும்
வளரும் பிள்ளை யழகு மறைந்திடும்
பழகுங் காலை யழகு மறைந்திடும்
பருவக் கன்னி யழகும் மறைந்திடும்

சுழலுங் காலச் சுழியில் அகப்படாச்
சுவைகொள் இன்பக் கவியழ கென்றுமே
அழிவி லாத அழகெனு முண்மையை
அறிதல் யார்க்கு மழகென லாகுமே. 3

வண்ணச் சித்திர நுட்ப வழகினை
வயங்கு சிற்ப அமைதி யழகினைக்
கண்ணைத் தன்வச மாக்கி யுளத்தினைக்
களிப்பி லாழ்த்து மியற்கை யழகினைப்
பெண்மைத் தன்மை கனிந்துள மாதர்தம்
பேர ழகினை நோக்கிடும் போதெலாம்
உண்மைத் தெய்வ ஒளியினைக் காண்பவர்
உலகம் யாவு மழகெனக் காண்பரே. 4

நிறத்தி லேயழ கென்று செருக்குவீர்
நினைவு போல வடிவம் அமைத்திடுந்
திறத்தி லேயழ கென்று மயங்குவீர்
செயற்கை யாகநும் மேனி மினுக்கியே
புறத்தி லேயழ கென்று மருட்டுவீர்
புகலு வேன்மனத் தூய்மை யெனுந்திரு
அறத்தி லேயழ கென்றுணர் வீரெனில்
அவனி மீதுநும் வாழ்வு செழிக்குமே. 5

அழகிற் பேரழ கிங்குகண் டேனந்த
அழகி லேயின்பக் காதல்கொண் டேனந்த
அழகு மக்கள்தம் வாழ்வினைக் காத்திடும்
அதனைக் காப்பது நம்கட னுமந்த
அழகைப் போற்றி வணங்குவம் வாருமின்
அழகி லங்கை மணித்திரு நாட்டுளீர்
அழகு மக்கட்பண் பென்னு மழகுகாண்
அதனில் நன்கு திளைத்தின்பம் காண்மினே. 6

## 10. பண்டிதர் சோ. இளமுருகனுர்

*[நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவரின் மகனுகப் பிறந்து, பழமையைத் தவருது பேணி, தமிழ்த்தாயை உருச் சிதைப்பவரைச் சீறித் தமிழின் பாதுகாவலராக இருப்பவர் பண்டிதர் சோ. இளமுருகனுர் அவர்கள். சிறந்த கவிஞர்; 'செந்தமிழ்ச்செல்வம்', 'வேனில் விழா', 'கப்பற் பாட்டு', 'தமயந்தி நாடகம்', 'அறப் போருக்கு அறைகூவல்', 'திருமலைச் சிந்து' முதலிய நூல்களின் ஆசிரியர்; உடுவில் மகளிர் கல்லூரியில் தமிழ்ப் பண்டிதராய்ப் பணிபுரிபவர்; அவரது 'செந்தமிழ்ச் செல்வ'த்திலிருந்து இந் நான்கு பாடல்களும் அநுவதிக்கப்பட்டுள்ளன.]*

### தொல்காப்பியம்

ஆரிய மொழியிற் சான்ருே னருமறை வகுக்க முன்னர்ச்
சீரியற் கலையின் ருென்மைச் சிறப்புடன் றிகழ்ந்தா லாய
நீரியற் பெருக்கா லந்நாள் நிலவுநூல் நிதிய மெல்லாம்
பேரிய லின்றி மாளப் பிறங்கிய தொருநூற் செல்வம். 1

ஐம்புலம் வென்ற நம்பி யருங்கலை நிறைந்த செம்மல்
நன்புகழ் சான்ற தொல்காப் பியனென நாமங்
கொண்டோன்
இம்பரிற் றமிழர் மேலா மருணெறி யிசைந்து வாழச்
செம்புலந் தொகுத்தான் தாய்க்குச் செழுமணிக்
கோயில் செய்தான். 2

கிறித்துவ நாதன் ருேன்றக் கிளக்குமூ வாயி ரத்தின்
மறித்துமே லைந்து நூறு வற்சரப் பழைமை கொண்டே
எறித்திடு நூல்கட் கெல்லா மிளவள ஞாயி ருகிக்
குறித்திடு தமிழின் ருென்மைக் குறியெனத் திகழு
மன்றே. 3

இந்திரச் செல்வம் போல விருந்தொளிர் தெய்வ நூலைச்
செந்தமிழ்ச் செல்வி வைகுந் திருமணிக் கட்டி லென்கோ
சந்தமார் தலைக்கு வாய்த்த தமனியச் சூடை யென்கோ
முந்துற வைய மாண்ட முருகமர் திகிரி யென்கோ. 4

# 11. நவாலியூர் சோ. நடராசன்

*[தமிழ், ஆங்கிலம், சம்ஸ்கிருதம் ஆகிய மும்மொழிகளிலும் நிறைந்த புலமைபெற்ற சோ. நடராசன் அவர்கள், சோமசுந்தரப் புலவரின் மற்றொரு மகனவர்; ஈழத்து எழுத்துத் துறைக்கு —கவிதை, கட்டுரை, சிறுகதை, நாடகம்—மிக முன்னோடியாக விளங்குபவர். காளிதாசனிலும், தாகூரிலும் வெகு ஈடுபாடுடையவர். 'மேகதூதம்', 'சாகுந்தலம்', 'கீதாஞ்சலி', 'இதோபதேசம்' முதலியவற்றை மொழிபெயர்த்துள்ளார். அவர் சொந்தமாகப் புனைந்த கவிதைகள் பல. அவற்றுள் 'மருதக்கலம்பகம்' சிறந்தது. சமீபகாலமாக விமர்சனத்துறையில் இவர் புதுக்கண்ணோட்டம் செலுத்திவருகிறார்.]*

## கடைக்காற்றீபம்

மன்னவன் பிம்பி சாரன் மாமுனி யான போதி
மன்னவன் தனக்கோர் கோவில் வகுத்தனன்
சலவைக் கல்லில்
மின்னுறள் மேகம் போல விளங்குமத் தாது கோபம்
மன்னிய வுளத்தாற் கல்லில் வகுத்ததோர் வணக்கம்
போலும். 1

மாலையி லரச கோட்ட மங்கையர் மடவார் மற்றுங்
காலனை யொத்த கண்ணார் காந்தளஞ் செங்கை பொங்க
மாலையும் பூவுஞ் செம்பொன் மணிவிளக் கேந்தி வந்து
சீலமே ஞான மூர்த்தி சேவடி சரண மென்பார். 2

அன்னவ னிறந்த பின்றை யவன்வழி யரசு செய்வான்
சொன்னவந் நெறியை வாளாற் றுடைத்துவெங் குருதி
கொண்டே
தன்மதம் நிறுவி வேத வேள்விகள் தழைக்க வென்றே
பன்னரும் பௌத்த நூல்கள் ஆகுதி பண்ணி னனே. 3

மாமுது வேனி லோர்நாள் மாலைவந் திறுத்த தாகக்
கோமுனி பரவு மன்பால் கோப்பெருந் தேவி தோழி
சீமதி யென்பாள் கங்கை சேர்ந்துநீ ராடிக் கையிற்
பூமலி கலமும் பொன்செய்புதுமணி விளக்குங் கொண்டே.

ஆயதன் தேவி முன்னர் அஞ்சலி செய்து செவ்வேல்
பாய்வது போன்ற நோக்கி லவள்முகம் பார்த்த போது
காயமு நடுங்க வெம்பிக் கனன்றுளம் பயந்து தேவி
வேயுறு தோழி தன்னை விஷமென வெகுண்டு பார்த்தாள்.

செய்வது சிறிதுந் தேராய் செத்திட உறுதி கொண்டாய்
வெய்யவெம் மரச ஞனை விலங்கிஞய் போதி நாதன்
வைகுமக்கோவில்சென்று வணங்குவார் தலையையின்னே
கொய்திடு மரச னிந்தக் கொடுநெறி விடுதி யென்ருள்.

கோப்பெருந் தேவி சொன்ன கொடுமொழி கேட்டு மங்கை
கூப்பினள் கையைச் சென்னி குவித்தனள் வணங்கி மீண்டு
ஒப்பொலி கேள்வி முன்னர் திருமணஞ் செய்து காதல்
தீப்பிய மன்னன் தேவி அமிதியை அணுகி நின்ருள்.

புதுமணங் கண்ட வந்தப் பூங்கொடி கையிற் செம்பொன்
மதியன ஆடி பார்த்து மையிருள் கூந்தல் வாரி
விதியென வகல்சீ மந்த ரேகையிற் சாந்து பூசி
ரதியென வழகு செய்தே ரம்மியக் கனவி லாழ்ந்தாள்.

கண்டது மவளைக் காந்தள் விரலுறு கைவி திர்க்க
ஒண்டொடி கூறும் நின்ஞல் உறுபழி யுற்ற தையோ
கண்ணெதிர் நிற்க வேண்டா கடிதகன் றிடுதி யென்னுத்
தண்மதி யனையாள் நீங்கிச் சார்ந்தனள் சுமதி முன்பே.

அரசிளங் குமரி யான அழகிய சுமதி யாங்கு
சரிகதி ரந்தி வேளை சாளரத் தருகே தங்கிப்
பெருகிய காத லூட்டும் காவியம் பருகி நின்ருள்
உருகிய தீக்கோல்போல உடம்பெலா முயிர்ப்புப் பெற்றே.

வெண்மலர்த் தீபங் கொண்டே விமலர்க்குப் பூசை செய்ய
நண்ணிய நங்கை தன்னைக் கண்டதும் நடுங்கி நெஞ்சில்
எண்ணிய நினைவு மாறக் காவியம் நிலத்தில் வீழப்
பெண்ணிது துணிவு நன்று பிழைத்ததுன் மதிகா
ணென்ருள். 11

வேறு

எங்கள் நாதனை யேத்துதற் கேகுமின்
செங்கை மாமலர் தூவித்தொ ழுவம்யாம்
தங்க லீரினித் தாமதஞ் செய்கலீர்
துங்க மாமுனி கோவிற்குத் தோகையீர்.

என்று கூறித் தலைநிமிர்ந் தேயவள்
சென்று வாயிலந் தப்புர மெங்கணும்
நின்று கூவினள் கேட்டவ ரிற்சிலர்
கன்றித் தூற்றக் கதவடைத் தார்சிலர்.

வேறு

மன்னவன் மாளிகைக் கோபுரத் துச்சியில்
மின்னிய வெண்கலக் கொடுமுடி மீது
மாலைக் கதிரொளி மின்னி மறைந்தது
வீதிக ளெல்லாம் வெய்யிருள் பரவ
நகர மாந்தர்த மரவ மடங்கப்
பசுபதி கோவிலிற் படுமணி யிரட்டும்
வேனில் மாலையில் விளங்குநீர்ச் சுனைபோல்
வானக வாவியில் விண்மீ னொளிரும்
புத்தர் கோவிலிற் புதுவிளக் கொளிர்விடும்
வித்தையீ தென்ன வீரர் மருண்டார்
மரக்கிளை யூடே மணிநிரை விளக்கின்
பெருக்கங் கண்டவச் சேவகர் பெயர்ந்தார்
வாளுறை யகற்றி வாய்விட் டலறினர்
யாரை யோநீ மடக்கொடி யோயெனப்
போதி நாதன் பூங்கழல் பரவும்
சீமதி நானெனச் செப்பினள் கணமே
போழ்ந்தது வாளே பாய்ந்தது குருதி
வீழ்ந்தனள் நங்கை விளங்கிய தாரகை
வெண்கற் றரையெலாம் செந்நிறம் படர
அவிந்தது கடைக்காற் றீபம்
அவிந்தது புத்தொளி அளவில்பல் லாண்டே

# 12. வித்துவான் க. வேந்தனர்

*[பண்டிதர், வித்துவான், சைவப்புலவர் ஆகிய பட்டங்களை வெகு இளமையிலேயே பெற்றுக்கொண்ட வேந்தனர் அவர்கள், ஈழத்துப் பேச்சாளர் வரிசையில் முன்னணியிலே திகழ்பவர். சொற்பஞ்சமின்றி, உணர்ச்சி ததும்பும் நடையில் வாலிப உள்ளங்களைக் கொள்ளைகொள்ளும் வகையிற் பேசுபவர்; 'அம்மா' முதலிய பாடல்கள்மூலம் குழந்தைக் கவிஞர்களிலே சிறந்தவராகக் கருதப்படுபவர்; உயர்தர வகுப்புப் பாடநூல்களுக்குச் சிறந்த விரிவுரை எழுதி, மாணக்கர்களின் உள்ளங்களில் இடம் பெற்றவர்; 'தமிழன் குரல்', 'நல்லூர்க் கந்தன் திருப்பள்ளி எழுச்சி' என்ற நூல்களின் ஆசிரியர். திருநெல்வேலி, பரமேஸ்வராக் கல்லூரித் தலைமைத் தமிழ்விரிவுரையாளர்.]*

## கவிஞன்

பாடுகின்ருேர் எல்லோருங் கவிஞ ரல்லர்
பாட்டென்ருற் பண்டிதர்க்கே உரிமை யல்ல
ஓடுகின்ற பெருவெள்ளப் பெருக்கே போல
உணர்ச்சியிலே ஊற்றெழுந்த ஒளியால் ஓங்கி
வாடுகின்ற மக்களினம் மாட்சி கொள்ள
மறுமலர்ச்சிப் பெருவாழ்வை வழங்கு மாற்றல்
கூடுகின்ற கொள்கையினுல் எழுச்சி கொண்டு
குமுறுகின்ற கோளரியே கவிஞ ஞவான். 1

பஞ்சணையில் வீற்றிருந்து பனுவல் பார்த்துப்
பாடுகின்ற கவிதைகளும் பாரான் வேந்தர்க்(கு)
அஞ்சியவர் ஆணைவழி அடங்கி நின்றே
ஆக்குகின்ற கவிதைகளும் அழிந்து போகும்
கஞ்சியின்றிக் கந்தைசுற்றி வாழ்வா னேனுங்
கனல்வீசி எரிமலைதீக் கக்கல் போல
விஞ்சுகின்ற சிந்தனையால் விழுங்கப் பட்டு
விருந்தளிக்கும் விறலோனே கவிஞ ஞவான். 2

கற்கண்டே செழுந்தேனே கனியே யென்று
கலகலப்பாய்ச் சுவைப்பெயர்கள் கலந்த நல்ல
சொற்கொண்டு சொல்கின்ற கவிதை யெல்லாஞ்
சொன்னவர்க்குந் தெரியாமல் தொலைந்து போகும்
விற்கொண்டு விடும்வீரன் அம்பு போல
விசைகூடும் அறிவுப்போர் வீறு தாங்கித்
தற்கொண்ட புலமைவெறிச் சொல்லாற் சான்றோன்
சாற்றுகின்ற கவிதையென்றுஞ் சாத லில்லை. 3

அம்மானை திருப்பள்ளி எழுச்சி கோவை
அந்தாதி கலம்பகங்கள் பார்த்துப் பார்த்து
விம்மாமற் பொருமாமற் கண்ணீர் விட்டு
விலைக்குமா ரடிக்கின்ற மெல்லி யர்போல்
சும்மாயோர் உணர்வின்றிச் சொற்கள் சேர்த்துச்
சொன்மாலை தொடுக்கின்றோர் கவிஞ ரல்லர்
தன்மானத் துள்ளொளியால் உலகை ஓம்புந்
தனியாற்றல் தாங்கிநிற்போர் கவிஞ ராவார். 4

பாட்டிற்கோர் புலவனென்றே தமிழ்நா டெங்கும்
பாராட்டும் பாரதியின் கவிதை ஆற்றல்
நாட்டிற்காம் விடுதலைப்போர் வெறியை ஊட்டி
நற்றமிழ்க்கும் மறுமலர்ச்சி நல்கக் கண்டோம்
வீட்டிற்குள் வீற்றிருந்தே கொள்கை யின்றி
விண்ணப்பப் பதிகங்கள் விளம்பு வோரை
ஏட்டிற்குள் கவிஞரென எழுதி னாலும்
இறவாத கவிஞரையே உலகம் ஏற்கும். 5

## 13. அல்வாயூர் மு. செல்லையா

[‘ஈழகேசரி’யில் 1938ஆம் ஆண்டு தொடக்கம் ‘அநு–சுயா’ என்ற புனைபெயரோடு நகைச்சுவைக் கட்டுரைகள் எழுதிப் பிரபலமடைந்த மு. செல்லையா அவர்கள் ஈழத்துச் சிறந்த கவிஞர்களுள் ஒருவராவர். காந்தீயக் கொள்கைகளிலும் ஹரிசன முன்னேற்றத்திலும் ஈடுபாடுடையவர். இலங்கை வானொலி நடத்திய கவிதைப் போட்டியிலே ‘புதிய வண்டுவிடு தூது’ என்ற கவிதைபாடித் தங்கப்பதக்கம் பரிசு பெற்றவர். பல கவியரங்கங்களிற் பங்குபற்றி வருபவர். ‘வளர்பிறை’, குமார வேள் பதிகம்’ என்பன இவரது சிறந்த கவிதை நூல்கள்.]

### என் செல்வ வாழ்வு

[பகட்டான பட்டின வாழ்க்கையை விரும்பாத பாவை யொருத்தி தன் செல்வ வாழ்வு எப்படி அமைகின்றது என்பதை நவநாகரிக நங்கையிடம் நவிலுகின்ருள்.]

விருத்தம்

வேலையிங் கில்லை யென்று
வீணுரை பேசா தென்றுங்
காலையில் முயற்சிக் கேகுங்
கணவனுர் புசிக்கத் தேங்காய்ப்
பாலையுஞ் சேர்த்த கட்டுச்
சாதம்நான் படலைக் கப்பாற்
சாலையிற் கொடுக்க நாதன்
தருமிள நகையோர் செல்வம்! 1

அந்தியில் வீடு சேர
அன்புடன் செம்பு நீரால்
வந்திடு வியர்வை நீக்கி
மற்றவர் மேல்து டைத்துத்
தந்திடும் பாய்த்த டுக்கில்
தனிமகிழ் வோடி ருத்தி
முந்துமோர் கொடுக்க உண்டு
முகமலர் வதுவோர் செல்வம்! 2

கடுப்பிலா உரையாற் சந்தைச்
　　செலவுகா சில்லை என்று
விடுக்குமென் வார்த்தை ஏற்று
　　மெல்லெனச் சிரித்தன் போடும்
இடுப்பினில் முடிச்ச விழ்த்தே
　　என்கையிற் பணத்தை ஈவார்!
அடுக்குமிவ் வின்ப மொன்றே
　　ஆயிர மமைவ தாமே! 3

அறுசுவை இல்லா உண்டி
　　ஆயினு மன்ப ருண்ண
உறுமகிழ் வுடன்ப டைத்தே
　　உளங்கிளர் வார்த்தை கூறிக்
குறைவற ஊட்டி அன்புக்
　　குழந்தைக்குந் தீற்றி யானும்
நிறைவென மிச்சி லுண்பேன்
　　நீணிலச் செல்வ மீதே! 4

தாங்கிடும் மடியி லென்றன்
　　தனையனை இருத்தித் தாய்மைப்
பாங்கினில் மலர்மு கத்தைப்
　　பார்த்துநான் வளர்க்கும் போது
ஓங்கிய செல்வ மெல்லாம்
　　என்மடி உற்ற தென்று
வீங்கிய மகிழ்வு பூண்பேன்
　　வேறொரு குறைதா னென்னே! 5

# 14. நாவற்குழியூர் நடராசன்

*['கிராம ஊழியன்' பண்ணையிலே முளைகொண்டு, 'ஈழகேசரி' யில் வளர்ச்சியுற்று, 'மறுமலர்ச்சி'யை நடத்தி வெற்றிகண்டு, கவிதாதேவியின் அன்புக்குப் பாத்திரமாகி இருப்பவர் நாவற் குழியூர் நடராசன் அவர்கள். தமிழிலும் ஆங்கிலத்திலும் பட்டம் பெற்று இலங்கை வானொலித் தமிழ்நிகழ்ச்சி அதிகாரியாகப் பணிபுரிபவர். கவியரங்கங்களிலே தலைமைதாங்கி அவற்றைச் சிறப்புற நடத்துவதில் வெகு சாமர்த்தியம் படைத்தவர். இவருக்குப்பின் இலங்கை வானொலியில் கவிதைமுழக்கம் அதிகமாகக் கேட்கிறது. 'சிலம்பொலி' இவரது சிறந்த கவிதை நூல்.]*

## எங்கள் பெருநிதியம்

வெள்ளிக் குவைகளெங்கள் செல்வமுமல்ல — ஒளி
வீசும் மணிவகையெம் செல்வமுமல்ல
அள்ளிச் சொரியினுங் குன்ருதுமலைபோல் — வளர்
அந்த நவநிதியும் செல்வமுமல்ல. 1

இங்கு கவிஞர்குலம் என்றுபலரும் — சொல்லும்
எங்கள் பெருநிதியம் எங்கவிதையே
பொங்கு மனநிலத்தைக் கிண்டிஅதனுள் — கவிப்
புதையல் இருப்பதனைத் தோண்டிஎடுப்போம். 2

தோண்டி எடுத்ததனைத் துப்புரவாக்கி — ஒரு
தோற்றங் கொடுத்ததனை நாணயமாக்கி
வேண்டி வருபவர்க்கும் வேறெவர்கட்கும் — நாம்
வேத முறைகடந்து தானமுஞ்செய்வோம் 3

கொட்டிக் குவித்ததனைக் கும்பல்களாக்கி — அதில்
குதித்துக் குதித்துவிளை யாடிமகிழ்வோம்
கட்டிப் பிடித்துருண்டு கற்பனைத்தேவி — உடன்
கவிதை உலகினிலே காதல்புரிவோம். 4

நாட்டை ஒருகவியில் தட்டிஎழுப்பி — இந்த
ஞாலம் புகழஅதன் கட்டைஅறுப்போம்
வாட்டி வதைத்துமுடி சூட்டுபவரைக் — கூர்
வாள்போ லொருகவிதை வீசிஅறுப்போம். 5

## 15. பண்டிதர் க. சச்சிதானந்தன் B. A.

*[ஈழத்தில் வெளிவந்த மிகச் சிறந்த கவிதைத் தொகுதியான 'ஆனந்தத் தேன்' என்ற நூலின் ஆசிரியரான சச்சிதானந்தன் அவர்கள், மும்மொழி வல்லுநர். 'உலகியல் விளக்கம்' கண்ட நவநீதகிருஷ்ணபாரதியாராற் சிறந்த கவிஞரெனப் பாராட்டப் பட்டவர். சுவாமி விபுலாநந்தரின் கீழிருந்து எழுத்துத் தொண்டு புரிந்தவர். 'அன்னபூரணி' என்ற இலக்கிய நயங்கொண்ட நாவலைச் சிறுவயதிலேயே எழுதியவர். 'தியாகமாமலை' என்பது மறைந்த தமிழ்த் தலைவர் திரு. கு. வன்னியசிங்கம்பற்றி அவர் எழுதிய ஒரு நூல்.]*

[ஆறு பருவங்களையும் ஆறுவிதமான குணங்களும் தோற்றங்களும் நடைகளும் உணர்ச்சிகளும் உடைய மாதர்களாகக் கற்பனை செய்கின்றார் கவிஞர். இவர்கள் ஒருவருடமென்கின்ற வட்டத்திலே கவிஞரைச் சுற்றிக் கும்மியடித்து நடனமாடி வருகின்றனர். அவர்களில் 'கார்மகள்', 'வேனில்மகள்' ஆகிய இருவரும் சில பாக்கள் மூலம் இங்கு காட்டப்பட்டிருக்கின்றனர்.]

### கார்மகள்

பின்னுபுரி மேகமெனும் பெய்குழலி ஞாடே
மின்னலெனும் புன்முறுவல் பொன்னென விளங்கப்
பன்னிறவில் மாலையது பைப்பய அலங்க
கன்னியிவள் கார்மகளெம் முன்வருதல் காணீர். 1

ஆடுமயி லாயிரமென் தோகைவிழி யாலே
கூடுமிவள் பொற்பழகு கொண்டுகளி கூரும்
காடுகள் சிலிர்த்திவளைக் கைத்தழைக ளாலே
ஓடிவரு கென்றருகு கூவுவதும் ஒன்றோ. 2

முல்லையொடு மல்லிகை முகிழ்த்தவிள வாசம்
பல்லித ழவிழ்ந்தபசுங் கொன்றைமலர்ப் பாயல்
மெல்லென வுறங்கியயற் ருழைமடல் மேவிச்
செல்லுமிவள் பின்வருகை செப்பியய லெல்லாம், 3

பொங்குநுரைப் பூம்புனல் மிதந்துகரை மோத
அங்கடி வளைந்ததை அணைக்குமரக் கொம்பில்
தொங்குமலர் மென்கொடி துவள்தர விருந்து
மங்கையிவள் நீர்த்திரை மறித்துவிளை யாடும். 4

சோருமொரு பொற்கொடி துவண்டுமுலை பூத்துக்
காரொடு கிடந்ததெனக் கண்டுயில்வர் போலே
சோருமிள மாதர்துடிக் கின்றகன வெல்லாம்
நீரருவி கட்கடை நெகிழ்ந்துவெளி செல்லும். 5

முடித்துமுடி யாதகுழல் முன்கர மலைப்ப
உடுத்ததுகில் பாதியொடு கையிடை யலம்ப
எடுத்தவடி தோறுறு சிலம்பொலி யிரங்க
அடைத்தகத வன்பெழ அடிக்கடி திறப்பார். 6

### வேனில்மகள்

அன்ற லர்ந்தமுக மென்றதா மரையும்
  அன்பெ ழுந்துவிரி முழுவலா நிலவும்
தென்ற லானசிறு செல்வ னிட்டசெழுஞ்
  சந்த னம்பரவு மின்ப வாசனையும்
கன்று மானெனவே நின்று துள்ளிவரு
  கள்ளம் யாதுமறி யாத மென்னடையும்
மன்ற லேபுனையும் பொலிவி லேபொலிய
  மார னோடுமலர் வேனி லேவருக.

### வேறு

தாமரை யின்நிற ஆடை துயல்வரத்
  தாவணி தென்றலி லேபுரளழக்
காமரு காவி யினங்க ளிரண்டெனக்
  கட்கய லோடி யிடம்புரள
மாவினி லேதுணர் கோதிய பூங்குயில்
  மார னிளம்படை போலுருகிக்
கூவிட வண்டுகள் பூவிடை சென்றிதழ்
  கோதிய வாச மெழுந்துலவ.

## 16. வே. சிவக்கொழுந்து (யாழ்ப்பாணன்)

*[நல்ல சந்தமும் நாளாந்த வாழ்க்கையில் நாம் காணும் உண்மைகளும் பொதிந்த இனிய கவிதைகளைப் பாடுபவர் 'யாழ்ப்பாணன்'. 'மாலைக்குமாலை', 'கவிதைக்கன்னி', 'பாலர்கீதம்', 'கண்ணன் பாட்டு', 'முல்லைக்காடு', 'ஆறுமுகநாவலர்' முதலிய கவிதை நூல்களின் ஆசிரியர். பாட புத்தகங்கள் பல எழுதியவர். 'தம்பி நாங்கள் கோயில்கட்டி', 'நண்டின் காலை ஓடிக்காதே' முதலிய அவரது குழந்தைப் பாடல்கள் பாட புத்தகங்களில் ஏறி ஈழத்துக் குழந்தைகளை மகிழ்விக்கின்றன. பல கவிதையரங்குகளிற் பங்குபற்றி வருபவர் இவர்.]*

### அந்தநாள் வாராதோ ?

தோட்டந் துரவுகளிற் சுவரின் சரிவுகளில்
நீட்டிக் கான்முடக்கி நிமிர்ந்து குதித்தெழுந்து
ஆட்டங்கள் போட்டுவிட்டு அமர்ந்தொடுங்கிப்
பின்கதவால்
வீட்டுக்குள் நுழைந்திடுநாள் மீட்டுமினி வாராதோ? 1

மாங்காய்க்குக் கல்லெறிந்து மகிழ மரத்தேறிப்
பாங்கான தோழருடன் பகலிரவாய் ஊர்சுற்றித்
தூங்காமல் தூங்கிச் சுவடிதனிற் கண்ணயர்ந்து
ஆங்காலம் போக்கிய நாள் அடுத்துமினி வாராதோ? 2

குடுமி குலைந்துவிழக் குறுவேட்டி அவிழ்ந்துவிட
நெடுமி உபாத்தியவன் நெடுந்தூரம் தொடர்ந்துவர
நடுவழியில் பிணக்குற்று நற்பிரப்பம் பழம்வாங்கி
வடுதிருந்தி வாழ்ந்த வாழ்வுமினி வாராதோ? 3

மட்டிக் கழுதையென மண்டுமிக மூடமெனக்
குட்டுக்கள் பலவிழவே குடல்நடுக்க மெடுத்துவிட
எட்டுடன் எட்டினை இருபது முறைகூட்டித்
தட்டுத் தடுமாறும் தருணமினி வாராதோ? 4

குமுக்காக் கணபதியாய்க் குழலண்ணைச் சாமியுமாய்
தமுக்குத் தமுக்கிடவே தாளங்கள் சரிபார்த்து
இமைக்குள் பலராகம் எடுத்தூதித் தலையாட்டி
நமக்குள் சபாஷ்போட்ட நாளுமினி வாராதோ? 5

## 17. க. இ. சரவணமுத்து (சாரதா)

*['கிராம ஊழியன்' பத்திரிகையிலே முளைவிட்டு, 'ஈழகேசரி'ப் பண்ணையிலே வளர்ச்சிபெற்ற 'மறுமலர்ச்சி வட்டார'க் கவிஞர் சரவணமுத்து, புதிய சிந்தனையும் உணர்ச்சி ஓட்டமும் நிரம்பப் பெற்ற அநேக கவிதைகளைப் பாடியுள்ளார். 'சுவர்க்கபூமி' முதலிய சிறு காவியங்களை அவர் அருமையாகப் படைத்துள்ளார். 'இரட்டையர்' என்ற புனைபெயரில் கிராமக் கவிதைகள்பற்றிப் பல ஆராய்ச்சிகள் நடாத்தியுள்ளார். 'சாரதா', 'மகேஸ்வரன்' என்பன அவர் புனைபெயர்கள்.]*

### வாழ்க்கைச் சுவடு

தென்னை மரத்தினைப் பாரதன் — உடன்
சேர்ந்து கிடக்கிற ஓலையின் — பல
சின்ன மிருக்கிற வாறினை — அதிற்
சிந்தை கணித்ததைக் கேளினி: 1

வாழ்க்கைப் படலமோர் தென்னையாம் — அதில்
மண்டி வளர்தளிர் மாந்தராம் — குலை
காய்த்துக் கனிவது போலவே — அவர்
காலம் முடிந்ததும் போவராம்! 2

மாந்தர் இறந்துபட் டாலுமே — அவர்
வாழ்க்கைச் சுவடுகள் மங்கிடா — இதைக்
காய்ந்து விழுந்தபல் ஓலையின் — அடிக்
கட்டைத் தழும்புகள் காட்டுமே! 3

மண்ணிற் பிறந்தபேர் எத்தனை? — அவர்
வாழ்க்கைச் சுவடுகள் எத்தனை? — வெறுந்
தண்ணீர் எழுத்தெனப் போவதில் — ஒரு
சார மிருக்குதோ சோதரா? 4

"வாழப் பிறந்தவன் நானெ"ன — இளம்
மார்பைத் துணிவுடன் வைத்துநீ — உள
நாளைப் பயனுள தாக்குவாய் — ஒரு
நாளும் அழிவணு காதடா! 5

தென்னை மரத்தினைப் பாரதன் — உடன்
சேர்ந்து கிடக்கிற ஓலைபோல் — உயர்
வண்ணச் சுவடுகள் ஆக்குவாய் — பிறர்
வாழத் துணைபுரி வாயெனில்! 6

## 18. சில்லையூர் செல்வராசன்

### (தான்தோன்றிக் கவிராயர்)

[‘தான்தோன்றிக் கவிராயர்’ என்ற புனைபெயரில் அங்கதச் சுவை மிகுந்த பாடல்களை எழுதித் தனக்கென ஒருபாதை வகுத்துக்கொண்டவர் சில்லையூர் செல்வராசன். அரசியல் தலைவர்களை அதேபாணியில் கவிதையில் அறிமுகஞ் செய்துவைத்து தன்னை மறக்காதபடி செய்துவிட்டார்; ‘நேற்று, இன்று, நாளை’ என்ற புதிய தலைப்பில் பனையரசன் நாடகத்தை அவர் அரங்கேற்றினார்; வானொலி நாடகங்களை எழுதியும் நடித்தும் வருபவர். கவி அரங்குகளுக்குத் தலைமைதாங்கிக் கவிஞர்களைத் தன் கவிதைப்பாணியிலேயே அறிமுகஞ்செய்வதிற் பேர்பெற்றவர்; குறிப்பிடத்தக்க விமர்சகர்.]

### கடவுளாகவேண்டும்

கடவுளாக வேண்டும் — நானோர்
கடவுளாக வேண்டும் — சொல்லின்
கடவுளாக வேண்டும்;

உலக மெங்குமுள மனித ரெல்லவரும்
ஊழி காலமெனை உள மிருத்தவே,
தலை சிறந்ததாய், நான், இனித்தசெந்
தமிழிலே கவிதை தான் படைத்திடுங்
கடவுளாக வேண்டும் — படைத்தற்
கடவுளாக வேண்டும்;

நல்லதென் றெனது துள்ளம் உள்ளுகிற
நனிசிறந்த தமிழ் அறமெலாம், உலகில்
வல்ல ஆயுளொடு வாழ, என்கவிதை
வாக்கினால், அவைகள் காக்கு மாற்றலின்
கடவுளாக வேண்டும் — காத்தற்
கடவுளாக வேண்டும்;

எங்கு செந்தமிழர் வாழ் விடர்ப்பிடியில்
இட்டவர் வரினும், எனது தீயுமிழும்
அங்கதக் கவிதை விழியினால், அவர்கள்
அற்று நீறுபட இற் றழித்திடுங்
கடவுளாக வேண்டும் — அழித்தற்
கடவுளாக வேண்டும்;

கடவுளாக வேண்டும் — நானோர்
கடவுளாக வேண்டும் — சொல்லின்
கடவுளாக வேண்டும்.

## 19. பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை

*[இலங்கைச் சர்வகலாசாலையின் தமிழ்ப் பகுதிக்குத் தலைமைப் பேராசிரியராயிருக்கும் டக்டர் கணபதிப்பிள்ளை அவர்களுக்கு நீண்ட அறிமுகம் தேவையில்லை. கிராமியநடையில் நாடகங்கள் பல எழுதி மேடையேற்றிப் புகழ் பெற்றவர்; 'காதலியாற்றுப்படை' என்ற புதுமை நிரம்பிய கவிதைநூலை ஆக்கியவர்; 'மாணிக்க மாலை', 'பூஞ்சோலை' என்பவற்றின் ஆசிரியர்.]*

### முதுமைப்பருவம்

முதுமைப் பருவம் வருதலும் எமக்கு
வாழ்நாள் உளத்திற் சுருங்கித் தோன்றும்
குழவிப் பருவத் தொருநா ளொராண்டு
போலவு மாண்டோ ரூழி போலவும்
காலம் மெல்லென ஊர்ந்து சென்றிடும்
காமக் களிப்புகள் கைக்கொள்ள முன்னர்
ஆற்றுக் கரையதிற் ரேற்றுபுல் நிலத்தில்
ஓடா தாற்றுநீ ரொளித்து நிற்றல்போல்
இளமைச் சிற்றலை ஏகா தெம்மொடு
நெடுநாட் களிப்புட னின்று விளையாடும்
கவலைக் கணைகள் கருத்தினில் முறையே
மாறி மாறித் தைத்திட வருந்திக்
கன்னஞ் சுருங்கிக் கோடுகள் காட்டும்
பருவந் தன்னில் வாழ்நாள் விரைந்து
செல்வது மேனோ தெரிகிலம் யாமே
மாந்தர் வாழ்நா ளளக்கும் கோள்காள்!
முதுமை நாளில் மருவுநும் திசைகள்
குறுகிய தோற்றம் கொள்வது மேனோ?
இளமைக் களிப்பின் புதுமை மலர்ச்சியும்
வளமுந் நலிந்து வாழ்வின் சுவையு
முறைந்து சுடலை வாழ்வும் நெருங்க
வாழ்க்கை யலைதான் விரைவாய்ச் செல்வது
வியப்பே வியப்பிது வாழ்வின் கதியை
மெல்லச் செல்லென மாற்றுவ ரெவரோ
துயரக் கேணியில் மூழ்கவிட் டெம்மை
நண்ப ரினத்தவ ரொருவர்பின் னொருவர்
போதர வில்லா வுலகம் புக்கனர்
இளமை யின்பநாள் நீடுதல் போல
முதுமைத் துன்பநாள் நீடிடின் மாந்தர்
பொறுத்த லமையா ரென்கருத் தாமோ
முதுமைத் துயரம் மோதி மோதி
நெடுநாள் நம்மை வருத்தாதே
ஆண்டவ னிவ்வா றமைத்தன னருளே.

# 20. து. உருத்திரமூர்த்தி (மஹாகவி)

*[தெல்லிப்பழை மஹாஜனக் கல்லூரியிற் படிக்கும்போதே 'மஹாகவி' என்ற புனைபெயரோடு கவிதைகள் எழுதத் தொடங்கிய இவர் இப்போது ஈழத்திற் புகழ்பெற்ற கவிஞராகிவிட்டார். 'மறுமலர்ச்சி வட்டாரம்' பெற்ற மற்றொரு கவிஞர்; 'கல்லழகி' முதலிய சிறு காவியங்களைப் படைத்துள்ளார்; 'வள்ளி' என்ற கவிதைத் தொகுதி இவருடையது. இவருடைய புகழுக்கு இன்னும் பல கவிதைத் தொகுதிகள் வெளிவரல்வேண்டும். 'சுதந்திரன்', 'வீரகேசரி' இவற்றில் வெண்பாப்போட்டி நடாத்துபவர். பல கவியரங்கங்களிற் பங்குபற்றுபவர்.]*

## படலை திறமினோ

சடை இருந்துமலர் சரிய மென்குதிகள்
சமையல் உள்ளினிடை திரியவும்
இடை இடைஞ்சல்படும்; எனினும் இன்கணவர்
இனிவ ருந்தருணம் எனவிரைந்
துடை கசங்கிடவும் உலையில் வெண்தரளம்
உவகை யோடுமிடு பாவையீர்! 1

பழைய செந்தமிழி லிசையை வீணையொடு
பழகிடும் தளிரின் விரலினும்
அழகு தந்தபொழு தவம் இழந்ததென
அகம் உளைந்துளைய எழில்நகம்
பழுது றும்கொடிய கரிப டிந்தும்,அவர்
பசிநி னைந்துருகு பண்பினீர்! 2

சுவை விருந்தெனநும் மலர்ம கிழ்ந்திடுதல்
சுலப மன்றெனினும் அவர்கள்நா
எவை விரும்புமென எளிது கண்டுசெயும்
இயல்பும் உண்டெனினும், இவைகளால்
நவை அகன்றுமனை அறம் உயர்ந்ததிலை
நகைவ லீர்இதயந் திறமினோ! 3

உணவும் உண்பதுதம் உரிமை என்பதனை
உணர் கிலாதசிலர் திரிகிருர் ;
பிணம் நடந்ததென அவரை அஞ்சிடுதல்
பிழை;பெ ரும்பிரமை ; பொருளையே
பணியும் உங்களது படியில் வந்தனர்கள் ;
பழிய லக்கதவு திறமினே ! 4

அடைய வந்ததிரு அகலும் என்றிதனில்
அவல மெய்துவதென் னடி? அனப்
பெடை மறந்தநடை தெரிய நும்கொழுநர்
பெயரும் ' நாய்கவனப் ' பலகையும்
உடைய வெம்படலை திறமின் ஓடி;வய
தொளிய வென்றஉடை ' கிடை 'யினீர் ! 5

---

# 21. இ. முருகையன்

*[இலங்கைச் சர்வகலாசாலையில் விஞ்ஞானப் பட்டம் பெற்ற முருகையனோடு ஈழத்தின் கவிதைப்பாதை ஒரு புதிய திருப்பத்தை அடைந்தது. விஞ்ஞானக் கருத்துகளையும் புது வகைக் கற்பனைகளையும் அழகிய சந்தநடையில் கவிதையாக்குவதில் வல்லவர். கவியரங்குகளிற் கவிதையை இரசனையாக வாசிப்பதிற் பெயர்பெற்றவர். 'குற்றம் குற்றமே' முதலிய கவிதை நாடகங்களையும் பல சிறு காவியங்களையும் படைத்திருக்கிருர். ஆசிரியத்தொழிலை விட்டுவிட்டு அரசாங்க மொழிபெயர்ப்பு அலுவலகத்திற் கடமைபுரிகின்ருர்.]*

### நன்மை கண்டோமா ?

அறிவு புலர்ந்தது, கீழ்த்திசை வானில்
ஆதவன் புன்னகை பூத்தது போலே !
நிறையும் இயற்கையை யாம்பணி கொண்டோம்
நேமியை வென்றனம் ; வானிற் பறந்தோம்
' விறுவிறு ' வென்று வளர்ந்தவிஞ் ஞானம்
விந்தை பலப்பல காட்டியும் என்ன ?
உறவு முறைகள் தளர்ந்து கழன்ற
உலர்ந்த மனங்கள் படைத்துவிட் டோம்நாம் 1

வீதி கிழித்து விரைந்தன வண்டி
விண்ணை இடித்து நிமிர்ந்தன மாடம்,
காதை உலைத்தது வானொலிப் பெட்டி
கண்கள் சுளுக்கின ஓவியம் பார்த்துப்
பூதங்கள் யாவும் பணிந்தன தாழ்ந்து
புத்துல கம்உருப் பெற்றதென் ருலும்
மோதி ஒருவரை மற்றவர் மாய்க்கும்
மூர்க்கத் தனத்தினைத் தீர்த்துவிட் டோமா? 2

எந்திர கூடத் திரும்புரு வாக
இவ்வுல கத்தை அழித்துப் படைத்தோம்
சிந்தனை மன்னர்கள் தோன்றுகின் ருர்கள்;
சித்திகள் பற்பல மெத்தின இங்கே.
உந்தும் தொழிற்களத் தின்புகைக் குப்பை
ஓடிப் பரந்து நிறைத்தது வானை
இந்த விதம்உரு மாறிய மண்ணில்
ஈர இதயங்கள் காய்ந்தன அந்தோ! 3

மின்னற் கொடிகள் வலித்து வெளிச்சம்
வீதிகள் தோறும் பளிச்சிட வைத்தோம்
கன்னற் சுவைஅமு தச்செழுங் கீதம்
காற்றிற் பிடித்திசைத் தட்டிற் பதித்தோம்
முன்னுக்கு முன்வந்து நாடகம் ஆடும்
முப்பரி மாணப் படங்கள் பிடித்தோம்
என்ன இவைகள் இருந்தும், மனத்தில்
ஈன இரக்கங்கள் போனதன் பின்னர்? 4

மலையைக் குடைந்து சுருங்கை சமைத்தோம்
மாமுகில் கூட்டி மழைபொழி வித்தோம்.
சலசலத் தோடும் நதிகளின் போக்கைத்
தடுத்துத் திருப்பிச் செலுத்திட வல்லோம்.

நிலம்உழு தேபயிர் செய்திடக் கூட<br>
நெல்லு வயலிலும் யந்திரம் கண்டோம்<br>
கொலைசெய்வ தைக்கலை யாக வளர்க்கும்<br>
கொள்கையை வீழ்த்த வழிஅறிந் தோமா? 5

சுட்டுப் பொசுக்கிப் புவியினைச் சாம்பற்<br>
சூடனாய் ஆக்கிட எண்ணிய பேர்கள்<br>
வெட்டிக் கசக்கிப் பிழிந்துசெந் நீரை<br>
வேண்டிய மட்டும் குடித்திட எண்ணும்<br>
துட்டர்கள், பாவிகள் மோசக்கா ரர்கள்<br>
சூழ்ந்துள ரே,இந்த மண்மிசை? எங்கள்<br>
கெட்டித் தனத்தினும் மூளையி னாலும்<br>
கிட்டும் பலன்களால் நன்மைகண் டோமா? 7

---

## 22. இ. நாகராஜன்

*[சிறுகதைகளைக்கூடக் கவிதைவர்ணனைபோல எழுதும் இ. நாகராஜன் மலைநாட்டுத் தோட்டப் பள்ளிக்கூடங்களில் ஆசிரியராய் இருந்தபடியால் கவிதாசக்தி கைவரப்பெற்றார். பல புனைபெயர்களிற் கவிதை எழுதும் நாகராஜன் அருமையான குழந்தைக் கவிதைகளைப் பாடியுள்ளார். 'புத்தர் கதை', 'கூத்தாடி' ஆகிய சிறு காவியங்களை அவர் பாடியுள்ளார். 'ஈழகேசரி'ப் பத்திரிகையிற் சிலகாலம் கடமையாற்றிய நாகராஜன் தற்போது 'தமிழன்' ஆசிரியர் குழுவிற் கடமையாற்றுகிறார். பல கவியரங்குகளிற் பங்குபற்றியவர். எழுத்தையே தொழிலாகக்கொண்ட இவர் நாடகந் தவிர்ந்த ஏனைய எல்லாத்துறைகளிலும் பரிச்சயமுள்ளவர்.]*

### நண்பன்

சுற்றமும் நட்புஞ் சூழச்<br>
சோதரர் துணையே செய்யப்<br>
பெற்றவர் அன்பாய்ப் பேணப்<br>
பெண்ணவள் இன்பம் பெய்ய<br>
உற்றநல் வாழ்வு எங்கோ<br>
ஒழிந்தது உலகில் எந்தப்<br>
பற்றுமே அற்று நானும்<br>
படுமரம் அன்ன ஆனேன். 1

மலரளி மணமே தேங்க
வாழ்வினில் மாரு இன்பம்
குலவிடக் கொண்ட பேறு
குறுகிட இன்று இந்த
உலகிடை நானே யன்றி
உறுதுணை வேறே யில்லா(து)
நிலையிலாச் சென்ற கால
நினைவிடை நிற்க லானேன். 2

பாழிருள் வையம் பற்றப்
பகலெலாம் உழைத்த மாந்தர்
ஆழ்துயில் பயிலுங் காலை
அடவியின் புறத்தே யோர்நாள்
தாழ்வுறு செயலால் நெஞ்சம்
சஞ்சலக் கடலாய் ஆர்ப்ப
மாழ்கிலா மனமே காட்டும்
வழியினைப் பற்றிச் சென்றேன். 3

என்முனே எதிர்த்து நிற்கும்
இருளதின் கருமைக் கூடே
சென்றிடச் செயலும் தோன்று(து)
திகைத்துமே அச்சம் தேங்க
நின்றனன் நீண்ட நேரம்
நிறையிருள் அதனைப் போக்க
இன்னொளிக் கதிரைத் தேய்ந்த
இந்துவும் ஏந்தி வந்தான். 4

ஒளியினைக் கண்டேன் எங்கும்
ஒளிர்ந்திடும் எழிலும் கண்டேன்
வழியினைத் தெளிந்தேன் ஆனல்
மனத்திடை வந்த அச்சம்,

ஒழிந்தில சென்ற காலத்
துற்றவர் நினைவே உந்த
விழியது நீரைப் பெய்ய
விசனமே உற்றேன், ஆங்கு. 5

"அன்பனே! அச்சம் வேண்டா
அடியனேன் அருகே உள்ளேன்
என்றும் நீ யென்னை ஏனோ
எண்ணிலை ஆனால்; என்றும்
உன்னையே பிரியா வாறாய்
உறுதுணை ஆக்கி என்னை
முன்னவன் வைத்தான்" என்ற
மோகனக் குரலைக் கேட்டேன். 6

அறிந்திடாக் குரலே ஆகா!
அலகையோ இதுவே என்ன;
"பிறந்துள காலந் தொட்டே
பிணைந்துள சாயல் என்னை
அறிந்திடாய் அன்பா! அல்லில்
அகலவே இல்லை உன்னோ
டுறைந்துமே வந்தேன் வான
ஒளியினிற் பாராய்"! என்றான். 7

அணங்கினர், நண்பர், சுற்றம்,
அன்னையர், பிதாவர், சேயர்
இணங்கியென் ஏவல் தட்டா
இளையவர் இருந்தா லென்ன?
கணமதும் பிரியா தெந்தக்
காலமும் அகலா உன்னை
உணர்ந்தனன் ஆகா! உன்போல்
உண்மையாம் உறவர் யாரோ? 8

## 23. வி. கி. இராசதுரை (இராஜபாரதி)

*[மட்டக்களப்புக் கல்லாற்றைச் சேர்ந்த வி. கி. இராசதுரை அவர்கள், இராஜபாரதி, பரிமளா, ஜீவா, ராஜினி, கல்லாற்றூர்க் கவிராயர் என்ற பல புனைபெயர்களிற் கவிதை எழுதுபவர். பதினெட்டாவது பராயத்திலேயே பாடத்தொடங்கிய அவர் இப்போது முன்னணிக் கவிஞர்களில் ஒருவராகிவிட்டார். 'தீயுண்ட வீரமுனை' இவரது படைப்பு. பல கவியரங்கங்களிற் பங்குபற்றுபவர். சோமசுந்தரப் புலவர் கவிதைப் போட்டியில் இரண்டாவது பரிசு பெற்றவர்.]*

### நீரரமகளிர் !

ஈரநிலா தாரகைகள் இடையில் நின்றே
இலங்கிற்று; வாள்வீச்சுப் போல நீரில்
சூரைசுறு கயல்பாய்ந்து துள்ளி யாடச்
சுழிக்கின்ற வெண்பரவைக் கடலின் மீது
நீரரவ மகளிரின் பண்ணைக் கேட்டு
நெஞ்சாரக் களிகொள்ள ஓட மொன்றின்
பாரமதாய் நான்மட்டும் இருந்தேன் தென்றல்
பாடிற்றுத் தென்னுட்டு முல்லைப் பண்ணை! 1

அர்த்தஇரா கிட்டிற்று; அகில மெங்கும்
அடங்கிற்று; மோனத்தில் ஆழி நீரைப்
பொத்துக்கொண் டோரழகி எழுந்தாள்! ஆக்கை
பொன்னிலவிற் பூந்தாதை அப்பிச் செய்த
சித்திரமாய்த் தோன்றிற்று; அவளைச் சுற்றிச்
சேடியரும் நின்றுகுரல் முதலா யார்க்கும்
துத்தம்கைக் கிளைஉழையும் இளியி னேடு
தூக்குவிள ரியுந்தாரந் தொனிக்க மீட்டும், 2

மகரயாழ் ஒருகையிற் சீறி யாழோ
மங்கைவலக் கையேந்தப் பாங்கிக் கூட்டம்
'தகதகெனு' வலம்புரிச் சங்க மேந்தித்
'தாம்தகத தோம்தந்த தானு' வென்றே

அகமுருகு மநுராகத் தமிழ் முழங்க
அந்தரத்தே சுந்தரக்கார் மேக மீது
சுகமுறவே வீற்றிருந்து விபுலா நந்தச்
சுவாமிஜீ சுரம்பாட லயித்த நெஞ்சம். 3

அருபமணித் தேரேறி அடிவா னத்துக்
கப்பாலு மப்பாலு மூர்ந்த காலை
பெருமுழவு கொட்டுமொரு கூட்டம், ஓசை
பேசுகுழல் வாசிக்கும் பெண்கள் கூட்டம்!
திருவடிகள் நடம்ஆடச் சிலம்பு பாடத்
தீந்தமிழார் நாதப்ர வாகம் பொங்கிப்
பெருகியதைப் பருகியவென் ஆவி ஆங்குப்
பெற்றசுவை மற்றெருகாற் பெறவு மாமோ? 4

கார்வண்ண முனிதந்த 'யாழ்நூல்' என்றன்
கைவந்து விரிபட்டுக் கிடக்கக் கண்டேன்.
ஆர்தந்தான் அதுபோன்ற ஆய்வு நூலை
ஆராய்ந்து தமிழின்பம் அனுப விக்க;
சீர்என்ன, சிறப்பென்ன, செறிந்தி னிக்கும்
சீர்தொடையின் நயமென்ன, எல்லா மென்றன்
நேர்நின்று பேரின்பக் காட்சி நல்கும்
நெடுங்கனவு நிலையென்ன, கொள்ளை யின்பம். 5

துய்த்துவிட்டேன் பேரின்பம், துயில் துறந்து
துடுப்பெடுத்தேன், ஓடத்தை நடத்த வாவி
எத்திசையை நோக்கிடினுஞ் சாந்தி கண்டேன்,
இன்பத்தின் எல்லையைவிட் டிறங்கல் போல
முத்துகளைப் பீச்சிவிட்ட சிப்பிப் பாறை
முட்டியது! கரையென்று தெளிந்து யானும்
பத்திரமாய் மட்டுநகர் மண்ணில் வந்தே
பளிங்குநிலா வழிகாட்ட வீடு சேர்ந்தேன். 9

## 24. கே. சின்னத்துரை (நீலாவணன்)

*['சுதந்திரன்' பத்திரிகையின் பேரணைப்பிலே முளைவிட்டு இப்போது பிரபல கவிஞராகி இருப்பவர் 'நீலாவணன்'. 'பட்ட மரம்' என்ற சிறுகாவியத்தையும், 'மனக்கண்' என்ற கவிதை நாடகத்தையும் எழுதியுள்ளார். ஈழத்துச் சிறுகதைச் சிற்பியும் நாடகாசிரியருமாகிய காலஞ்சென்ற 'இலங்கையர்கோனி'ல் பேரன்புபூண்டவர். பல கவியரங்குகளிற் பங்குபற்றி முன்னணிக் கவிஞரெனப் பெயர் பெற்றவர்; கிழக்குமாகாணத்துப் பெரிய-நீலாவணையைச் சேர்ந்தவர். கல்முனை எழுத்தாளர் சங்கத் தலைவர்.]*

### வல்லீரேல் வாழ்க!

அழகு நிலா வாழ்க! – நெஞ்சை
அள்ளும் நிலா வாழ்க!
இளமை யென்ற ஒளியி னுல்என்
இதயம் வென்ற பருவ மங்கை
பழகு கின்ற பொழுது தந்த
பழர சத்தை விஞ்சு கின்ற
அழகு நிலா வாழ்க! – நெஞ்சை
அள்ளும் நிலா வாழ்க!
கலக மூட்டு பசியை வென்று
கயமை யென்ற இருளை மென்று
உலக முய்யும் வகையில் நல்ல
உபயம் சொல்ல வல்லை யாயின்
அழகு நிலா வாழ்க! 1

எழில் மயிலே ஆடு! – தோகை
இள மயிலே ஆடு!
தோகை யென்ற திரையின் மீது
தொக்கு வைத்து மரக தத்தை
வாகை மன்னர் முன்ன ராடும்
வனிதை யென்ன அழகு மின்ன
எழில் மயிலே ஆடு! - தோகை
இள மயிலே ஆடு!

உழுது வாழ்வு பொலிய வைக்கும்
உழவர் நெஞ்சின் அயர்வு மாய
அழுது மாளும் உலகின் துன்பம்
ஆற்றும் அன்பில் தோற்றி டாது!
எழில் மயிலே ஆடு! 2

தென்ற லேநீ வீசு! – குளிர்மைத்
தென்ற லேநீ வீசு!
ஊடி நின்ற கணிகை மாதர்
ஒப்ப நின்ற பூங்கு லத்தைக்
கூடி இன்பம் கொண்டு வந்து
கோடி யாக ஆடி ஆடித்
தென்ற லேநீ வீசு! - குளிர்மைத்
தென்ற லேநீ வீசு!
மனிதன் என்ற ஒருகு லத்தை
மடமை யாற்பி ரித்து வைக்கும்
பிணியின் மிஞ்சு கொடிய கொள்கை
பிய்த்து வீச வல்லை யாயின்
தென்ற லேநீ வீசு! 3

மாங்கு யிலே பாடு! – தளிராம்
மதுவை யுண்டு பாடு!
மழலை மைந்தர் குழலின் யாழின்
மலரின் வண்டின் இனிய இசையின்
கழக மாம்உன் குரலி னுல்என்
கவிதை நெஞ்சம் உருகி வார
மாங்கு யிலே பாடு! – தளிராம்
மதுவை யுண்டு பாடு!
ஒருமை வாழ்வின் உயர்வை யிந்த
உலக மெங்கும் ஓதி அன்பின்
பெருமை பொங்க சிறுமை மங்க
பேசும் சொல்லில் ஆசை யாயின்
மாங்கு யிலே பாடு! 4

## 25. சி. கிருஷ்ணபிள்ளை (திமிலைத்துமிலன்)

[ஈழத்திலும் தமிழ்நாட்டிலும் நடைபெற்ற குழந்தைப் பாடற் போட்டியில் மூன்றும் பரிசைப் பெற்று ஈழத்திலும் சிறந்த கவிஞர் உளர் என்பதை நிலைநாட்டியவர். பல சிறு காவியங்களைப் படைத்துள்ளார். ஈழத்திலும் தமிழ்நாட்டிலும் பிரபல பத்திரிகைகள் இவரது பாடல்களை விரும்பி வரவேற்கின்றன. பல கவியரங்கம் கண்டவர்; மட்டக்களப்பு எழுத்தாளர் சங்கத்தின் காரியதரிசி; 'மாலதி' என்ற புனைபெயரிற் சிறுகதைகளும் 'கிருஷ்ணு' என்ற பெயரில் ஓவியமும் தீட்டுபவர்.]

### தையும் பிறந்தாச்சு!

தையும் பிறந்தாச்சு வெய்யில் எழுந்தாச்சு
தாமரை மொட்டும் மலர்ந்தாச்சு! — முல்லை
தாழை மடலும் விரிந்தாச்சு! — வள்ளி
கையை விரித்ததும் காகம் பறந்தாச்சு
காளைகள் நான்கும் நடந்தாச்சு — அவள்
கையிற் குடமும் எடுத்தாச்சு! 1

மஞ்சள் வெய்யிலினைக் கொஞ்சும் வயல்களில்
வாணன் கதிர்களும் கொய்தாச்சு! — தோட்ட
வாழை கரும்புகள் வந்தாச்சு! — கையில்
இஞ்சும் இளநீரும் மஞ்சளும் சேர்ந்தாச்சு
இன்பப் பசும்பால் கறந்தாச்சு! — முற்றம்
எங்கணும் கோலம் எழிலாச்சு! 2

தித்திக்கும் முக்கனி சர்க்கரைத் தேன்துளி
தேக்கி அடுப்பினில் வைத்தாச்சு! — பானை
சீக்கிரம் பொங்கி வழிந்தாச்சு! — முத்துச்
செந்நெல் அரிசியைக் கொட்டித் துழாவிடச்
செங்கை அகப்பை பிடித்தாச்சு! — அவள்
முன்கை வளைகள் சிரித்தாச்சு! 3

குய்ப்புகை மொய்த்த குவளை விழிகளின்
கூம்பலில் முத்தும் உருண்டாச்சு! — கன்னக்
கொய்யாக் கனிகள் சிவந்தாச்சு! — அவள்
கைப்பட வைத்த கருணைப் படையலில்
காதலின் நெஞ்சம் புரிந்தாச்சு! — அவள்
கண்கள் இரண்டும் குனிந்தாச்சு! 4

பொங்கற் களிப்பினில் துங்கக் கதிரவன்
புன்னகை இன்பம் புரிந்தாச்சு! — மாட்டுப்
பொங்கல் தினமும் முடிந்தாச்சு! — அவள்
திங்கள் முகத்தினில் பொங்கும் மகிழ்ச்சியில்
சேதிகள் எல்லாம் தெரிந்தாச்சு! — மச்சான்
சிந்தையில் வள்ளி நிறைந்தாச்சு! 5

# 26. இராஜ அரியரத்தினம்

[சுமார் பத்தொன்பது வருடகாலமாக 'ஈழகேசரி'ப் பத்திரிகையின் ஆசிரியராகப் பணிபுரிந்து, இலக்கியத் தரங் குன்ருமல் அதை நடாத்திப் பல எழுத்தாளர்க்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து, இளம் எழுத்தாளர் பலரைக் கண்டுபிடித்து அவர்கள் வாழ்வில், எழுத்தில் மேன்மைபெற்றதைக்கண்டு உளம் பூரித்தவர் இராஜ அரியரத்தினம் அவர்கள். 'பாதையோரத்தில்' பாட்டைசாரிக் குறிப்பும், 'சோணசலக் கவிராயர்' என்ற புனைபெயரில் கவிதையும் எழுதியவர். 'கல்கி பிறந்தார்' என்ற அவரது நூல் கல்கி ஆசிரியரிடம் அவர்கொண்ட பாசத்தின் எதிரொலி; தமிழ் நாட்டுக்கும் ஈழத்துக்கும் இலக்கியப்பாலம் சமைத்தவர். இப்போது 'ஈழநாடு' ஆசிரியராகப் பணிபுரிகிருர். சென்னை கலைக்களஞ்சியத் தொகுதிகளிலும் குறிப்புக்கள் எழுதியுள்ளார். 'கதிரவன் வருகை', 'கலைமகள்' இதழில் வெளிவந்தது.]

## கதிரவன் வருகை

காலைக் கதிரவன் சோலை மணத்தைக்
கவர்ந்திட வில்பூட்டி
மாலை யணிந்துமே மாமலர் சூடினன்
மன்மதக் கோலமானுன். 1

வாலைக் குமரிஇவ் வையத் திருமகள்
மாரன் மனங்குளிர
பாலில் நறுங்கனி பெய்து பனிரசம்
பண்பாய் விருந்தளித்தாள். 2

கோலக் குறுநகை கோமளவல்லி ஓர்
குங்குமச் செவ்வரியாள்
நீலக் கடல்அலை நித்திலங் கொட்டிட
நின்புகழ் பாடுகின்ருள். 3

## 27. இ. அம்பிகைபாகன் (அம்பி)

*[தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் விஞ்ஞான ஆசிரியராக இருக்கும் அம்பிகைபாகன் அவர்கள் தமிழில் விஞ்ஞானத்தைப் பற்றி எழுதுவதோடு நின்றுவிடாமல் கவிதைகளும் எழுதினர். அக்காலத்திலேயே நல்ல கவிஞனுக்குரிய அறிகுறிகள் தென்பட்டன. ஏழு, எட்டு ஆண்டுகளுக்குப்பிறகு 'அம்பி' கைதேர்ந்த கவிஞனுகிவிட்டார். முருகையன் அவர்களைப்போல விஞ்ஞான விஷயங்களை இலேசாகக் கவிதைகளுள் நடமாடவிட்டுப் புதுமையைச் செய்ய முயல்கிருர். பாரதிதான் இவரது ஆதர்சகவி. சமீபத்தில் நடைபெற்ற மூன்று கவியரங்குகளிற் பாடிய 'அம்பி' யின் கவிதைகள் மிக உயர்தரமாகவிருந்தன எனப் பலரும் போற்றினர்.]*

### மகா சக்தி

உள்ளத் தினமலர்ப் பொய்கையிலே — சக்தி
உண்மை மதுசுரந் துந்திநிற்பாள்
மெள்ளத் தனிமையிற் செல்கையிலே — அவள்
மென்மைக் கதைபல தந்துநிற்பாள். 1

தெள்ளு தமிழ்ப்பணி செய்கையிலே — சக்தி
தேடி யடைந்துகை யேற்றுநிற்பாள்
பிள்ளைப் பருவத்து மையலிலே — அவள்
பின்னும் முன்னும்தொடர்ந் தோடிநிற்பாள். 2

தாழ்வு மனச்சுமைச் சஞ்சலத்தில் — சக்தி
தாங்கு மனப்பலம் நல்கிநிற்பாள்
வாழ்வு பொருள்விளங் காதுநிற்பின் — அவள்
வண்ணப் பொருள்மிகச் சொல்லிநிற்பாள். 3

பூதங்கள் ஐந்திலும் பூத்துநிற்பாள் — சக்தி
புன்மை யழித்துளங் காத்துநிற்பாள்
நாதங் கணீரென மீட்டுநெஞ்சில் — அவள்
நல்ல பணிக்கருச் சேர்த்துநிற்பாள். 4

எல்லா மவளென மேவிநிற்பாள் — சக்தி
எம்மை யாளும்பக்தி யாகிநிற்பாள்
பல்லா யிரம்பொரு ளாகிநிற்பாள் — அவள்
பாரின் முழுப்பொரு ளாகிநிற்பாள். 5

பார்க்கு மிடமெலாம் பார்த்துநிற்பாள் — சக்தி
பண்பு நிறைந்தபண் ணுகிநிற்பாள்
ஈர்க்கு மிடமெலாம் ஈர்ந்தமிழாய் — அவள்
ஈடில் விழுச்செல்வ மாகிநிற்பாள். 6

# 28. ஐ. சிவசாமி (தில்லைச்சிவன்)

[வேலணைத் தீவைப் பிறப்பிடமாகக்கொண்ட தில்லைச்சிவன் திருநெல்வேலி முத்துத்தம்பிவித்தியாசாலையிற் படிக்கும்போதே, கவிதை எழுதத்தொடங்கிவிட்டார். 'மறுமலர்ச்சி', 'ஈழகேசரி', 'சுதந்திரன்' ஆகிய பத்திரிகைகளில் கவிதைகளை அதிகம் எழுதிய இவர் இப்போது 'ஈழநாடு','தேனருவி' ஆதியவற்றில் எழுதி வருகிறார். இவருடைய பாடல்கள் பலவற்றைத் தொகுத்துப் பாரதிமன்றம், 'கனவுக்கன்னி' என்ற நூலாக வெளியிட்டிருக்கிறது. பல கவியரங்கங்களிலும் பங்குபற்றிவரும் இவரது பாடல்கள் கிராமியநடையிலும், இலக்கிய நடையிலும் சிறந்து விளங்குகின்றன. இவர் தீவுப் பகுதி எழுத்தாளர் சங்கத் தலைவர்.]

## ஏதோ உன் உள்ளம்?

தென்றலிலே முல்லைமலர்ச் செழுந்தாது நாறத்
தேன்மொழியுன் மெல்லிதயச் செழுமைமனத் தூறும்
குன்றினிலே பிறந்தோடும் குளிர்புனலின் ஓதை
குறும்பொலிசெய் தென்இதயத் தின்பவெறி யூட்டும்
மன்றினிடை ஒயிலாக மயிலாடும் போது
மானே நீ என்னோடு உறவாடக் கண்டேன்
மன்றலிலே மாலையிட்டு என்னையுன தாக்க
மாதரசே தாமதமேன் ஏதோஉன் உள்ளம்? 1

படராலம் விழுதைத் தொடுத்து முடித்த
பந்தரில் நீதந்த விளையாட்டுச் சோற்றை
'உதவாது' என்று உதைத்து எழநான்
'ஊதாரி' என்றென்னை ஏசித் தொலைத்தும்
இதமாக என்னயல் வந்து இளித்தும்
'இந்தாங்க கோபமா' என்றும் இரந்தாய்
மதமாநான் இன்றுன்னை எண்ணி இளைத்தேன்
மாதரசே தாமதமேன் ஏதோஉன் உள்ளம்? 2

தொட்டில் அசைத்திடத் தூளிகை கேட்டாய்
தோரண மாய்ஆலின் விழுதை அமைத்தேன்
பட்டுத் துணியினுற் சுற்றிய கற்சேய்
பள்ளிகொள்ள என்று பாட்டு மிசைத்தேன்
வட்டில்என ஆலின் இலையை எடுத்து
வார்த்த பொய்க்கூழினை உண்டுக ளித்தேன்
மெட்டி ஒலிக்க அணைகுவை இன்றே
மெல்லெனப் போய்எங்கோ ஒளிகுதல் நன்றே? 3

# 29. த. திருநாவுக்கரசன் (நாவேந்தன்)

*[அரசியலில் ஈடுபாடுகொண்ட 'நாவேந்தன்' அதிகமாகக் கவிதை பாடாவிட்டாலும், பாடியவை நன்ருகவே இருக்கின்றன. புங்குடுதீவைப் பிறப்பிடமாகக்கொண்ட இவர் சிறு வயதிலேயே எழுத்துத்துறைக்கு வந்துவிட்டார். 'பிச்சைக்காரி', 'தலைவர் வன்னியசிங்கம்', 'ஸ்ரீ அளித்த சிறை' என்பன இவர் எழுதியுள்ள நூல்கள். பிறர் அபிப்பிராயத்தைப்பற்றி இலட்சியம் செய்யாது தன்மனம் நினைப்பதை அப்பட்டமாகவே எழுதுபவர், பேசுபவர். மானிப்பாய் மெமோறியல் கல்லூரி ஆசிரியர்.]*

## காளி தரிசனம்

அன்றொருநாள் நள்ளிரவு ஊருறங்கும் நேரம்
அறையினிலே தனியாகப் படுத்திருந்த போது
என்னருகே வந்துநின்ற பேருருவங் கண்டேன்
எழுதவொணுப் பயங்கரத்துக் கிலக்காகி விட்டேன்
கொன்றுவிடுங் கொடும்பார்வை அனல்சிந்தும் விழிகள்
கோரைப்பல் குகைவாயாள் கூந்தல்பனைக் காடு
"சென்றுவிடு அம்மா நான் பயந்துதுடிக் கின்றேன்"
செல்லவிலை, அவள்சிரித்தாள் சித்தநடுக் குற்றேன்! 1

ஒன்றிரண்டு நிமிடங்கள் ஓடியபின் னன்னுள்
ஓகோவென் றிரைந்திட்டாள்; ஓலமிட்டு விட்டேன்
"நன்றுசெய்தா யென்மகனே! நானென்ன பேயா?
நலஞ்செயவே வந்துற்றேன்; அஞ்சலை நீ" என்ருள்
"கொன்றுவிடு என்னாலே தாங்கவிலை" என்றேன்
"கொல்வாளோ குழந்தையைத்தா யென்று" நகை
செய்தாள்
அன்புடனே பார்த்திட்டாள்; அச்சமெலாம் போச்சு
"அம்மா! நீ யாரென்றே யறைந்திடுவா" யென்ன! 2

"தண்ணளிசேர் தாயென்றே அனைத்துலகும் புகழும்
தருமத்தின் வடிவம்நான் அன்னைபரா சக்தி
மண்ணினிலே தீமையெலாம் முன்னின்று மாய்க்கும்
வடிவம்நான் கொடுமைகளை மாகாளித் தேவி
கண்களிலே கனலுமிழக் காய்ந்திடுவேன், தீயோர்
கதறிடுவார்; நல்லவரைக் காத்துநலம் புரிவேன்
நண்ணுபல தோற்றத்தும் நானுள்ளே" னென்ருள்
நாயகியாள் பாதமலர் நானிறைஞ்சி நின்றேன்! 3

வாழிஜகன் மாதாவுன் வண்ணவுருக் காண
வாஞ்சைமிகக்கொண்டேனுன் வருகவென்றே யிசைப்பன்
ஊழி நடம் புரிந்திடுவா ளுருமாறி விட்டாள்
ஒளிவெள்ளம், ஒளிவெள்ளம் உமையவளைக் கண்டேன்
ஆழிஅலை மோதிவரு பொன்சிரிப்புக் கண்டேன்
அழகெல்லாம் ஒருருவாய் அவளிலங்கக் கண்டேன்
தோழியவ ளாகிவிட்டாள் துயரெல்லாம் விட்டேன்
"தோல்வியிலை வெற்றியெலாம்" என்று நவின் றிட்டாள்

"பாடுகநீ பைந்தமிழிற் கன்னலெனும் பாக்கள்
பரவுகஇப் பூவுலகிற் தெய்வஅருட் காந்தி
கேடுதரு தீநெறியின் பாசவலை நீங்கிக்
கேளிரென வாழ்ந்திடுக மக்கள்குல மெல்லாம்
பீடுநடை போட்டுலக வாழ்வுபெரி தென்னப்
பேசிடுக இன்பநிலை பெற்றுமிக வாழ்க
கூடுமென தன்பு, அருள் நிச்சயம" தென்றே
கூறிமறைந் திட்டனளே யன்னைபரா சக்தி! 5

## 30. நயினைகவி ஆ. இராமுப்பிள்ளை

*[வரகவி நாகமணிப் புலவர் வாழ்ந்த நயினாதீவிற் பிறந்த ஆ. இராமுப்பிள்ளை 1937ஆம் ஆண்டு முதல் கவிதைபாடிவருபவர். 'காலிமுகக் களரி'யெனுங் கால்பேசின் கவினைப்பற்றி அக்காலத்தே அவர்பாடிய கவிகள் அழகாக இருந்தன. இயற்கைப் புலமையோடு விரைவாகக் கவிபாடும் அவர், ஆயிரத்துக்கு மேற்படக் கவிதைகள் எழுதியுள்ளார். 'நயினை நாகபூஷணி திருவோலக்கக் காட்சியும் அவள் மாட்சியும்'; 'நயினை கந்தவேள் அருள் வேட்டல்' என்பன அவர் பாடி வெளிவந்த கவிதைநூல்கள். நூல்வடிவம் பெறாதன ஏராளம். ஆயுள்வேத வைத்தியர்; முருகனின் மேல் மாறாதபக்தியுடையவர். அவர் கவிதைச் சிறப்புக்குக் 'கதிர்காமம் சென்ற வண்டே' ஒருசான்று.]*

### கதிர்காமம் சென்ற வண்டே !

சூழத் தெரியும் பசிய மலைகள்
    சுரும்பர்க் கென்ன சொல்லிற்றோ
ஆழத் தெரியும் காலிக் கடலின்
    அலையின் நாதம் கேட்டாயா
நீளத் திகழும் கானற் சோலை
    நிலவின் ஒளியிற் கண்டாயா
வாழப் பொருளைத் தேடுங் கவலை
    வாலைத் தலையைக் காட்டிற்று ? 1

போகப் போக வெளியே திரியும்
புலனென் ருகிப் புரியேறிப்
பாகத் திருபைங் கிளிவாழ் குமரன்
பாதந் தலையப் பார்த்தாயா!
ஊகித் தெவரும் முழுகிச் சேற்றை
உடம்பிற் பூசிக் கொண்டாரா
வேகத் தேரை விடுத்து நடக்கும்
வீதிப் போதை விளங்கிற்று? 2

மோன முசுட்டு எறும்பு நடக்கும்
முறையா யூரும் மாணிக்க
கானக் கங்கை நடையா யெந்தக்
கவிஞன் நடையைக் கையாள்வாய்!
வானமி ருண்டு அழுது குழறி
வாழ்த்தி வழங்க மகிழ்ந்தாயா?
ஆனை நடக்கும் ஞான நடையில்
அருளின் பொருளைக் கண்டாயா? 3

அலைமே லலையாய் மணிவாய் மிடறு
அகரம் உகரம் இசைபோட
கலையே உருவாய் வருவார் திரளும்
கண நா யகனைக் கண்டாயா?
மலைமேல் ஒருமா னுடையான் மகனாய்
மயில்வா கனனாய் வருவானைத்
தலையே பணிய முருகா! சரணம்!!
சரணம்!! சரணம்!! என்றாயா? 4

செல்வக் கதிரைப் பள்ளப் புனலிற்
சிரித்துக் களித்துக் குளித்தாயா?
முல்லைக் கொடிக்குப் பாரித் தேராம்
முருகன் உறவு பெருகிற்று?
நல்லைப் பதிக்கும் பழநி மலைக்கும்
நாமம் பாடி யாடநீ
செல்லத் தருக 'செலவு' என்றொரு
'சீட்டு'க் கேட்டுப் பெற்றாயா! 5

## 31. செ. கதிரேசபிள்ளை (கதிரேசன்)

[மஹாஜனக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றும் கதிரேசபிள்ளை 'மறுமலர்ச்சி' வட்டாரத்திலே பிரபலமாக விளங்கிய கவிஞர். 'கிராம ஊழியன்', 'ஈழகேசரி' ஆகிய பத்திரிகைகளில் அக்காலத்தே அவர் கவிதைகள் பல வெளிவந்தன. இலக்கியரசனையிற் சிறந்தவர். இடையே பல வருடங்கள் கவிதை முயற்சியை நிறுத்திவிட்டுப் பாடசாலை நாடகங்கள் பலவற்றை எழுதினர். இப்போது மறுபடியும் வானெலிக் கவி அரங்கத்திலும், பிறகவி அரங்கங்களிலும் பங்குபற்றி வருகிருர். சமீபத்தில் அவர் ஒரு நல்ல கதையைச் சிறுகாவியமாகப் பாடி வைத்திருக்கிருர்.]

### முழுதும் உண்மை

தெள்ளமுதே பைங்கிளியே தேனே யென்றன்
செந்திருவே என்னுயிரே என்று தேம்பும்
உள்ளத்த னுய்விட்டான் தலைவ னுங்கே
உயர்தலைவி யோடுள்ளம் ஒன்றி யென்று
கள்ளமனப் புலவோர்கள் கட்டு ரைத்தார்
காவியங்கள் அவையெல்லாம் பொய்கள் என்றேன்
உள்ளதையே அவருரைத்தார் என்று நெஞ்சத்
துணர்வித்தாய் நீயேதான் உண்மை உண்மை. 1

பிணையோடு கலையினங்கள் பேணி வாழும்
பிடியோடு களிறுவரும் மரத்தின் மீது
துணையோடு சுகித்திருக்கும் பறவை யீட்டம்
தொல்புவியின் தன்மையெல்லாம் சூழ்ந்துநோக்கின்
இணைசேர்ந்து வாழ்வதிற்ருன் இன்ப மென்ருர்
ஈதெல்லாம் வெற்றுரைகள் பிதற்றல் என்றேன்
மணிமொழிதான் அவையென்றென் உள்ளந் தேற
வழியமைத்தாய் நீயேதான் உண்மை உண்மை. 2

பூண்டதிறல் வீரனுக்குப் பொறுமை போலப்
பொங்கியெழும் பாலுக்கோர் அகப்பை போல
மூண்டெரியும் தீபத்துக் கெண்ணெய் போல
மோகமிகும் இளைஞர்தம துணர்வை யெல்லாம்
காண்டகைய நலங்காணக் காட்ட வல்லார்
கன்னியரே என்கின்ருர் யானுஞ் சேர்ந்து
சான்றமொழி யென்கின்றேன் இந்தத் தன்மை
தந்ததுவும் நீயேதான் உண்மை உண்மை. 3

## 32. க. பே. முத்தையா (விடிவெள்ளி)

*['சமூகத் தொண்டன்' பத்திரிகைக்குப் பொறுப்பான ஆசிரியராயிருந்து நல்ல தலையங்கங்கள் எழுதிப் புகழ்பெற்றவர் 'விடிவெள்ளி'. பலரை எழுத்துத்துறைக்கு அறிமுகப்படுத்தியவர்; ஐக்கியசங்க நடவடிக்கைகளில் ஈடுபாடுடையவர்; திருக்குறளில் பரிச்சயமும், பழைய நூல்களைப் படிக்கும் ஆர்வமும் உடையவர்; வெண்பா பாடுவதில் நிகரற்றவர்; நகைச்சுவைப் பேச்சாளர்; எழுத்தாளர் புத்தக வெளியீட்டுமன்ற முக்கியஸ்தர்.]*

### ஆபிரகாம் லிங்கன்

உள்ளமும் உடலம் போல உயரிய தோற்றம் பெற்ருய்!
அள்ளிருட் கண்டம்தந்த அடிமைகள் கண்ணீர் மாற்றும்
வள்ளலே! சுதந்திரத்தின் வடிவமே மனித அன்பின்
வெள்ளமே! உள்ளூர்யுத்தவெம்பகைஒழித்துயர்ந்தாய்!

தச்சனின் மகனுய் வந்து தண்ணணி உருவாய் நின்ருய்!
இச்சகம் மறவா துன்னை இறைவனின் சிந்தை பெற்ருய்!
அச்சமும் பொய்யு மில்லா அரசியல் ஒன்று செய்தாய்!
அச்சயன் பெரியோன் லிங்கன் அமெரிக்கதவமே வாழ்க!

ஆற்றினில்படகுதள்ளி அஞ்சல்கள் கொடுத்துழைத்தும்
சாற்றிய வணிகஞ் செய்தும் சட்டநூ லறிஞ னுகிப்
போற்றிட உயர்ந்து தேசப் பொதுநலத் தலைவ னுய்
சேற்றினில்வளர்ந்தசெந்தா மரையெனத்திகழநின்ருய்!

விலையிலாச் சுதந்தி ரத்தை
விளைத்திட்ட புகழோய்! நின்னைக்
கொலைசெய்தான் கொடியன் ஆனல்
கோயிலிற் றெய்வ மானுய்
சிலுவையும் நஞ்சும் குண்டும்
செம்மனத் தோர்கள் பெற்ற
நிலையிலே நீயும் பெற்ருய்!
நின்பெயர் வாழ்க! வாழ்க!!

## 33. கவிஞர் எம். விக்டர் (ஜெயம்)

*['சமூகத்தொண்டன்', 'விவேகி' ஆகிய பத்திரிகையிற் கவிதைகள் எழுதிவரும் 'ஜெயம்' குறிப்பிடக்கூடிய கவிஞர். 'கற்பனைக் கருத்துக்களைக் கனிந்த தமிழ்ச்சொற்களிலே வார்க்கும் கவிஞர்' எனச் 'சமூகத்தொண்டன்' பத்திரிகை இவரை அறிமுகஞ் செய்துள்ளது. பயிற்றப்பட்ட தமிழாசிரியர். 1961ல் வெளிவந்த 'சமூகத்தொண்டன்' ஆண்டு மலரில் இருந்து இப்பாடல் அனுவதிக்கப்பட்டுள்ளது.]*

### மனிதமனம்

ஞானரதம் வாராதா? வான்வீ டேக
நங்கவலை தீராதா? என்றே நாளும்
மோனநிலைத் தவம்பேணி இன்பந் துய்க்கும்
மூத்தவர்கள் பாற்சென்று காதின் பக்கம்
"கானசபா மேடைதனில் அடிகாள் வந்து
கௌரவிக்க வேண்டுகிறோம்" என்றுற் போதும்
தேனமுத நீராடிக் களித்தா லென்னத்
"திருவருளின் படிநாளை வருவோம்" என்பார். 1

திங்களுக்கோர் முறையேகித் தெய்வக் கோயில்
திருமுன்னே கடமைக்காய்த் தலையைச் சாய்ப்பார்
மங்களநற் சுபதினங்கள் நடுவே மட்டும்
மனமிளகி மனைகளுக்குச் சமுகஞ் செய்வார்
எங்களது மனைமக்கள் இவரே சொர்க்கம்
எமக்கேனிப் பொதுவாழ்வு என்பார் காதில்
"தங்களுக்கோர் 'சேவைவிழா' எடுப்போ" மென்றால்
தரித்திரர்போற்பொறுமையொடும் தலைசாய்ப்பார்கள். 2

ஏழைகளின் துயர்காணார் இரப்போர் வந்தால்
"எங்கள்நாய் பெரியஇனம் பாயு" மென்பார்
பேழைகளில் உள்ளதொகைப் பணத்தைக் காத்துப்
பெருக்குவதில் இமையோர்போற் கண்ணும் மூடார்
"வாழையடி வாழையெனத் தருமம் காக்கும்
வள்ளல்கள்தம் பரம்பரையில் வந்தோ" மென்பார்
வேளைவரும் போதிலெலாம் பணத்தைக் கொட்டி
விளம்பரத்தின் உச்சியிலே அறத்தைச் சேர்ப்பார். 3

# 34. கவிஞர் M.S.M. சாலிஹ் (அண்ணல்)

*[பெரியகிண்ணியாவைச் சேர்ந்த முஸ்லீம் அன்பர் சாலிஹ் அவர்கள்தான் கவிஞர் ‘அண்ணல்’. 1953ஆம் ஆண்டுதொடங்கித் தரமான கவிதை பாடி வந்த அவர் இடையில் சிறிது காலம் ஓய்ந்துவிட்டு மறுபடியும் எழுதத் தொடங்கியுள்ளார். இப்போது அவர் பாடும் கவிதைகள் மிக மிகத் தரமாக இருக்கின்றன. ஈழத்துப் பல பத்திரிகைகளிலும் அவர் இப்போது தொடர்ந்து எழுதிவருகிறார்.]*

### வள்ளி

சிற்றிடையின் மேற்குடத்தை வள்ளி — வைத்தே
சிற்றெழுங்கை யால்வருவாள் துள்ளி
அற்புதமே காற்சிலம்பு பாடும் — அவ்
வடிதொடர்ந்தே என்னிதயம் ஓடும்
விற்புருவம் வேல்விழியைப் பாய்ச்சும் — அந்த
வேதனையிரா முழுதுங் காய்ச்சும்
வெற்பொடிக்குந் தோள்களுமே சாயும் — அவள்
வீங்கியமார் பிற்புரள மாயும். 1

செவ்வரத்தம் பூமலரும் வேளை — அவள்
செங்கரத்தை வீசவரும் காலை
எவ்வியெவ்விப் பட்சியினம் பாடும் — கமலி
ஏழையெனப் பொய்கையதில் வாடும்
செவ்வொளியைக் கீழடிவான் கக்கும் — வள்ளி
செவ்வுடலும் அவ்வொளியை ஒக்கும்
கொவ்வையிதழ்க் கீழ்முனையோ பூக்கும் — அக்
குறுநகையோ என்னுயிரைத் தாக்கும். 2

பட்டுடலைத் தொட்டணைத்துத் தாவி — மிகப்
பக்குவமாய்க் கட்டுதற்கேன் வேலி?
சிட்டுகளாய் வாழவிடாள் அத்தை — கிழச்
சீமானிடம் நாடுகிறுள் சொத்தை!
“பட்டமரம் போலவா நான் வாழ்வேன் — அத்தான்
பாசமெலாம் கொண்டுகடல் வீழ்வேன்”?
திட்டமிட்டுச் சூளுரைத்தாள் வள்ளி — அந்தச்
சேதிஅவள் தாய்வயிற்றில் கொள்ளி! 3

# 35. பா. சத்தியசீலன்

*[இளம் எழுத்தார்சங்க ஆண்டுவிழாவின் கவியரங்கத்திலே கலந்துகொண்ட சத்தியசீலனின் கவிதையைக் கேட்ட பல அன்பர்கள் ஆச்சரியப்பட்டே விட்டார்கள். பல பத்திரிகைகள் அவரது கவிதையைப் புகழ்ந்து எழுதின. அல்லைப்பிட்டியைச் சொந்த ஊராகவுடைய சத்தியசீலன் பயிற்றப்பட்ட ஆசிரியர்; பாலபண்டிதப் பட்டதாரி; இளம் எழுத்தாளர் சங்கம் நடாத்திய கவிதைப் போட்டியில் 'தணியாத ஆவல்' என்ற கவிதைமூலம் முதலாம் பரிசைப் பெற்றவர். சோமசுந்தரப் புலவர் நினைவுப் போட்டியில் மூன்றும் பரிசுக்குத் தகுதியானவர் எனத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.]*

## பொங்கல்

### புறக் காட்சி

வயலெலாஞ் செந்நெல்! வரம்பெலாம் பூக்கள்!
வஞ்சியர் வாயெலாந் தமிழ்ப்பண்!
அயலெலாந் தோப்பு! அங்கெலாங் கனிகள்!
அவைபறித் திடுமிளஞ் சிறுவர்!
கயல்விழிக் கன்னி பின்னலில் முல்லை!
காளையர் நெஞ்சிலே காதல்!
செயலெலாம் வெற்றி தமிழனுக் கென்று
செப்புது மனையெலாம் வெடிகள்!

### மனைக் காட்சி

கன்னியர் கைகள் போடுது கோலம்!
காளைகை எடுக்குது கரும்பு
அன்னைகை பிள்ளைக் கணியுது பட்டு!
அடுப்பிலே அமருது பானை
செந்நெலின் அரிசி, தேனொடு பாலும்!
சேருது; மூளுது செந்தீ!
பன்னலம் பொங்கப் பொங்குது பாலும்!
பரவுது செந்தமிழ்ப் பாடல்!

### பாடல்

பொன்னென் கதிராற் பூவுலகைப்
புரக்கும் பரிதிப் புரவலனே!
மன்னே! உன்னைத் தமிழ்ப்பண்ணால்
மக்கள் மகிழ்ந்து பரவுகிறோம்
முன்னைத் தமிழே! நீவாழி!
மூத்த மொழியே நீவாழி!
அன்னாய் இயற்கை வாழிய! உன்
ஆரா அன்பு வாழியரோ!

## 36. கவிஞர் மு. சோமசுந்தரம்பிள்ளை

*[கிழக்குமாகாணத்தைச் சேர்ந்த மண்டூரில் இருக்கும் சோமசுந்தரம்பிள்ளை சமீபகாலமாக முன்னேறிவரும் கவிஞரிற் குறிப்பிடக்கூடியவர்; புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையின் மாணுக்கர். பெரியோர் கூட்டுறவும் இலக்கிய விடயங்களைத் தெள்ளத் தெளிய அறியும் ஆவலும் உள்ளவர்.]*

### பொற்பமருங்கன்னி!

சொற்சுருக்கம் பொருட் பெருக்கம்
சுவைப் பதற்குப் பொருத்தம்
பற்பல நூல் பலமொழியிற்
படித் தோரும் படிக்கும்
அற்புதமாய்க் கற்ப துவாய்
அகண் டுலகை ஆளுங்
கற்பகமாம் பொற் பமருங்
கன்னி திருக் குறளே. 1

மணிக் குழவி நடைபழகும்
மலராம் சிற் றடிகள்
இணைக்கும் இரண் டடிக்குள்ளே
எத்தனை பொற் குவியல்
அணைக்கும் அருட் கருத்தாக்கம்
அவனி யெலாம் விழுங்கும்
கணப் போதிற் களைதீர்க்குங்
கன்னி திருக் குறளே. 2

உண்ண உண்ணத் தெவிட்டாமல்
உளம் வளர்க்கும் ஊற்று
புண்ணடைந்த மனம் ஆற்றும்
புத்தொளி சஞ் சீவி
மண்ணுலகை வாழ் விக்கும்
மதுரத் தீம் பாடல்
கண்ணிரண்டு சிற்றடி யாள்
கன்னி திருக் குறளே. 3

## அநுபந்தம்

உ

நவாலியூர்ப்

பண்டிதர் சோ. இளமுருகனார்

இயற்றிய

# செல்வி பராசத்திக் காஞ்சி

### நேரிசையாசிரியப்பா

*நில்லா வுலகம்*
*புல்லிய நெறித்து*

காலைத் தோன்றி ஞாலம் விளக்கும்
பால ஞாயிறு படுதலுங் கண்டனம்;
மாலைத் தோன்றும் வண்மதிக் கொழுந்து
சிலநாள் மறைந்தும் சிலநாட் டேய்ந்தும்
சிலநாள் வளர்ந்துஞ் செல்வதுங் கண்டனம்;
மதனச் சோலையில் வண்டினம் பாடப்
புதுமணம் கஞற்றிப் புத்தெழில் காட்டுங்
கொழுமலர்த் தொகுதியின் கோமளச் செவ்வி
வழிநாட் காலை யழிவதுங் கண்டனம்;
இத்திறத் தியற்கை மெய்த்திறந் தெரித்தலின்
பாங்கருஞ் சிறப்பிற் பல்லாற் றானும்
நில்லா வுலகம் புல்லிய நெறித்தெனக்
காப்பியப் புலவன் யாப்புற மொழிந்தனன்;
இருவினைக் கீடா யெழுவகைப் பிறவியில்
மருவிய மன்னுயிர் வாழ்தலுஞ் சாதலும்
அம்மவோ புதுமைய வல்ல விம்மையில்
மக்கள் யாக்கை மருவிய நல்லோர்
புக்கதம் வாழ்விற் பொருளென மதித்த
நல்லன வழகிய வாய்மைய நாடி
எந்தம் வாழ்வினை யெழில்செய் வேமால்;

## கைத்தலத் திலங்கிய கதிர்மணி விளக்கு

எழுமையும் பின்னும் அருண்மழை பொழிந்தே
பழுதற வெம்மைத் தழுவிய வளர்க்கும்
அன்னைவீற் றிருக்கும் அழகமர் கோயிலை
மன்னிய நன்னெறி வளர்கழ கத்தை
மஞ்சார் வள்ளல்கள் துஞ்சிய பின்னர்த்
தஞ்சந் தாமெனத் தண்டமிழ்க் கலைஞரைப்
பொன்னெனப் போற்றிய பொன்னைய வேளை
மடிமிசை வளர்த்த குடிமுதற் செல்வி
குரும்ப சிட்டிப் பெரும்புவி மடந்தை
கைத்தலத் திலங்கிய கதிர்மணி விளக்கே !
மெய்த்தவங் தந்த வித்தகச் செல்வீ !
மனையகம் விளக்கும் மலர்நீங்கு திருவே !!
யாண்டுநீ சென்றனை யாண்டுநீ சென்றனை ;
ஈண்டியாம் புலம்ப யாண்டுநீ சென்றனை ;
நெஞ்ச முருகுமால் !! நெஞ்ச முருகுமால் !!
துஞ்சிய தறிதலின் நெஞ்ச முருகுமால் ;

## வித்தகத் தந்தையின் விளங்கு கண்மணி

எழுத்தறி வித்தகர் வழுத்துநின் தந்தை
துஞ்சிய தறிந்து நெஞ்சுதடு மாறிச்
செஞ்சொற் புலவனை யிழந்தநா டொப்ப
அஞ்சினன் அழுதனன் அரற்றினன் நின்றான்
வித்தகத் தந்தைக்கு விளங்குகண் மணியே
மற்றவன் வானொலி வாசகம் வரைந்துநீ
உற்ற பொழுதினில் உதவுவை மன்னே !!

நாளே வாரந் திங்க ளெனவருஉம்
தாள்களை விளக்குந் தகைசால் கட்டுரை
சிறுகதைப் புனைவு மறுவறு பாடல்
ஆமிவை வெட்டி யழகுற வொட்டி
வண்டினம் மலர்வயின் மதுத்தொகுத் தாங்கு
கொண்டிடச் சுவடிகள் கூட்டுவை மன்னே !!

*மாலையில் மந்திர*
*வாசகப் பாடல்*

கதிரெழு காலையும் மாலையுங் கருத்துடன்
மதிவளர் செஞ்சடை வானவன் தாளிணை
மாறு வன்பொடு வணங்குவை மன்னே !!
தேறு தரற்றிச் சிந்தைநைந் துருகும்
உடன்பிறப் பாளர் ஒருதனி நால்வர்க்குத்
திடம்பெறு கண்ணுங் கவசமு மாகி
மாலையில் மந்திர வாசகப் பாடல்
வேலை யமுதமும் வெள்கிடப் பண்ணொடு
விதிமுறை யோதிப் பயிற்றுவை மன்னே !!

*அன்னையின் கவலையும்*
*அவலமும் காணில்*

நின்னைப்,
பெறுமுறை பெற்று வளர்முறை வளர்த்த
அன்னையின் கவலையு மவலமுங் காணில்நீ
பொன்னுல குறுது மீளுவை மன்னே !!
மஞ்சார் கூதிர் வானகம் போல
அஞ்சன நெடுங்கண் வெம்புனல் காலச்
செங்கைத் தாமரை சென்னியிற் சேரக்
கண்ணே மணியே காதற் கொழுந்தே
விண்ணோர்க் கினிய விருந்தா யினையோ
ஆற்றேம் பிரிந்தினி யாற்றேம் பிரித்த
கூற்றே கொடிதெனக் குழறுநின் றுய்க்குத்
தேற்றஞ் செப்பித் திருத்துவ தார்கொல் !!

## பல்லாண்டு வாழிநின்
## நல்லியற் பண்பு

செல்விபரா சக்தி !! செல்விபரா சக்தி !!
பல்வகை யெழுத்தர் பாவலர் பண்டிதர்
நின்மனைப் புகுவா ராயி னவர்தமக்
கின்முகங் காட்டுவை மன்னே !! இன்மொழி
பன்முக மாகப் பகருவை மன்னே !!
நின்னைப் பிரிதலின் நின்மனை யெமக்குத்
தாமரை நீங்கிய பொய்கையுந் தண்ணூர்
மாமதி நீங்கிய வானமும் போலுமால் !!
வித்தகத் தந்தைக்கு வேண்டுநூல் வழங்குநின்
சித்திரப் பூங்கை சேர்ந்தது கற்பகம் ;
இசையமு தளித்தலின் இனியவை செப்பலின்
வசையும் வம்பும் வறண்ட காதலும்
மேவிய சிறுகதைக் காவியம் பயிலா
நிறையும் நாணமும் குறைவறப் பெறுதலின்
காம தேனுவைச் சேர்ந்தது நின்வாய் ;
வங்கக் கவிஞனும் தங்கப் புலவனும்
பொங்குங் கற்பகப் புதுமணச் சோலையில்
வீற்றிருந் தெழுதும் வித்தகப் பாட்டினை
ஆரப் பருகுதற் கடைந்ததுன் செவியே ;
அழகு மிளமையும் அருளு மாற்றலும்
கொழிதமிழ் கூட்டுணுங் கொள்கையு முடையோன்
ஒருதனி முருகன் றிருவடி நீழலிற்
புகுந்தனை நீயுநின் பொற்புறு நெஞ்சமும் ;
செல்விபரா சக்திநின் பொல்லாப் பிரிவால்
நில்லா துலகெனக் கண்டனம்
பல்லாண்டு வாழிநின் நல்லியற் பண்பே.

விலை : ரூ. 1-50

திருமகள் அழுத்தகம், சுன்னாகம்—E602-7/62